# திருநாவுக்கரசு நாயனார்

அப்பர் திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர்

பிறப்பு திருவாமூர்

இயற்பெயர் மருணீக்கியார்

தலைப்புகள்/விருதுகள் நாயன்மார், மூவர்

தத்துவம் சைவ சமயம் பக்தி நெறி

மேற்கோள் நற்றுணையாவது நமச்சிவாயவே

நால்வர்

தலைப்புகள்/விருதுகள் நாயன்மார், சமயக்குரவர்

தத்துவம் சைவ சமயம் பக்தி நெறி

அப்பர் சுவாமிகள் கட்டமுதுத் திருமண்டபம்

திருஞானசம்பந்தரை பல்லக்கில் சுமக்கும் அப்பர்

அப்பர் சுவாமிகள்

அப்பர் திருநாவுக்கரசு நாயனார் கி.பி. ஏழாம் நூற்றாண்டு தொடக்கத்தில், தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்தை வளர்த்த சிவனடியார்களுள் ஒருவரும், சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் ஆவார். இவரைத் தேவார மூவருள் இரண்டாமவர் என்றும், இறைவனிடம் பக்தி செலுத்துதலில், தொண்டை அடிப்படையாகக் கொண்டவர் என்றும் புகழ்கின்றனர்.[1]இவர் தமிழகத்தில் முதன்முதலாகச் சிவன் கோயில்களில் உழவாரப் பணியை அறிமுகப்படுத்தியவர் ஆவார்.

இவரைத் திருஞானசம்பந்தர், 'அப்பர்' (தந்தை) என்று அழைத்தமையால் அப்பர் என்றும், நாவுக்கரசர் என்றும் அறியப்படுகிறார். இவர் தாண்டகம் எனும் விருத்த வகையைப் பாடியமையால், இவரைத் தாண்டகவேந்தர் என்றும் அழைக்கின்றனர்.

**பெயர்கள்**

மருணீக்கியார் - இயற்பெயர்

தருமசேனர் - சமண சமயத்தைத் தழுவிய போது கொண்ட பெயர்

நாவுக்கரசர், திருநாவுக்கரசர் - தேவாரப் பாடல்களைப் பாடியமையால் பெற்ற பெயர்

அப்பர் - திருஞானசம்பந்தர் அன்போடு அழைத்தமையால் வந்த பெயர்

உழவாரத் தொண்டர் - சிவாலயங்களை தூய்மை செய்யும் பணியைச் செய்தமையால் பெற்ற பட்டப்பெயர்

தாண்டகவேந்தர் - தாண்டகம் எனும் விருத்த வகையைப் பாடியமையால் பெற்ற பட்டப்பெயர்

**இளமைக் காலம்**

திருநாவுக்கரசர் சோழநாட்டின் திருமுனைப்பாடி பகுதியிலிருந்த கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவாமூர் எனும் ஊரில் வேளாள குலத்தில் புகழனார் மற்றும் மாதினி இணையாருக்குப் பிறந்தவர்.[5] இவருடைய இயற்பெயர் மருணீக்கியார் ஆகும்.[5] இளமையில் சைவ சமயத்தினை விட்டு சமண சமயத்தவரானார். சமண நூல்களைக் கற்று அம்மதத் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார். அப்போது தருமசேனர் என்று அழைக்கப்பட்டார்.[5]

தருமசேனரின் தமக்கையார் திலகவதியார். இவர் சிவபக்தராக இருந்தார். அதனால் சமண சமயத்தில் தன்னுடைய தம்பி இணைந்ததை எண்ணி வருந்தி இறைவனிடம் முறையிட்டார். அதனால் தருமசேனருக்குக் கடுமையான சூலை நோய் (வயிற்று வலி) [5] ஏற்பட்டது. சமண மடத்தில் செய்யப்பட்ட சிகிச்சைகள் பலனளிக்காமல் போகவும், திலகவதியாரின் ஆலோசனைப்படி தருமசேனர் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" எனத் தொடங்கும் பாடலைப் பாடினார்.[5] இப்பாடலால் நோய் தீர்ந்தது. அதன் பிறகு சைவ சமயத்தவராகி நாவுக்கரசர் என்று அழைக்கப்பட்டார்.[5]

பல்வேறு சிவாலயங்களுக்குச் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடினார். அத்துடன் சிவாலயங்களைத் தூய்மை செய்யும் பணியையும் செய்தார். இதனை உழவாரப் பணியென்று சைவர்கள் அழைக்கின்றனர். பல்வேறு சிவாலயங்களில் உழவாரப் பணி செய்து முன்னோடியாக இருந்தமையால், "உழவாரத் தொண்டர்" என அழைக்கப்பட்டார். இன்றும் சைவர்கள் உழவாரப் பணியின் தலைவராக நாவுக்கரசரையே கொள்கின்றனர். இவர் இறைவனை தொண்டு வழியில் வழிபட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

சமண சமயத்தைச் சேர்ந்த மன்னன் மகேந்திர பல்லவன் திருநாவுக்கரசரைப் பலவிதங்களில் துன்புறுத்தினான். அத்துன்பங்களைத் திருநாவுக்கரசர் இறைவன் அருளால் வென்றார். இத்தகைய துன்பங்கள் இழைக்கப்பட்டும், இறைவன் அருளால் மீண்டதைக் "கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும் நற்றுணை ஆவது நமச்சிவாயவே" எனும் நமச்சிவாயப் பதிகத்தில் பதிவு செய்துள்ளார். இறுதியில் மகேந்திர பல்லவனும் சைவ சமயத்தைத் தழுவினான்.

தனது முதிர்ந்த வயதில் சிறுவராயிருந்த திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருடன் சேர்ந்து தல யாத்திரைகள் செய்தார். மேலும் திருஞானசம்பந்தரால் அப்பர் எனவும் அழைக்கப்பட்டார். இவர் பாடிய தேவாரப் பாடல்கள் 4, 5, 6 ஆகிய மூன்று திருமுறைகளில் வகுக்கப்பட்டுள்ளன. சமயத் தொண்டு புரிந்த திருநாவுக்கரசர் 81ஆவது வயதில் திருப்புகலூரில் சித்திரைச் சதயத்தில் இறைவனடி கலந்தார்.

வானத் திளமதியும் பாம்புந் தம்மில்
வளர்சடைமேல் ஆதரிப்ப வைத்தார் போலுந்
தேனைத் திளைத்துண்டு வண்டு பாடுந்
தில்லை நடமாடுந் தேவர் போலும்
ஞானத்தின் ஒண்சுடராய் நின்றார் போலும்
நன்மையுந் தீமையு மானார் போலுந்
தேனொத் தடியார்க் கினியார் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 1

விண்ணோர் பரவநஞ் சுண்டார் போலும்
வியன்துருத்தி வேள்விக் குடியார் போலும்
அண்ணா மலையுறையும் அண்ணல் போலும்
அதியரைய மங்கை யமர்ந்தார் போலும்
பண்ணார் களிவண்டு பாடி யாடும்
பராய்த்துறையுள் மேய பரமர் போலுந்
திண்ணார் புகார்முத் தலைக்குந் தெண்ணீர்த்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 2

கானிரிய வேழ முரித்தார் போலுங்
காவிரிப்பூம் பட்டினத் துள்ளார் போலும்
வானிரிய வருபுரமூன் றெரித்தார் போலும்
வடகயிலை மலையதுதம் மிருக்கை போலும்
ஊனிரியத் தலைகலனா வுடையார் போலும்
உயர்தோணி புரத்துறையு மொருவர் போலுந்
தேனிரிய மீன்பாயுந் தெண்ணீர்ப் பொய்கைத்

திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 3

ஊனுற்ற வெண்டலைசேர் கையர் போலும்
ஊழி பலகண் டிருந்தார் போலும்
மானுற்ற கரதலமொன் றுடையார் போலும்
மறைக்காட்டுக் கோடி மகிழ்ந்தார் போலுங்
கானுற்ற ஆட லமர்ந்தார் போலுங்
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தார் போலுந்
தேனுற்ற சோலை திகழ்ந்து தோன்றுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 4

கார்மல்கு கொன்றையந் தாரார் போலுங்
காலனையும் ஓருதையாற் கண்டார் போலும்
பார்மல்கி யேத்தப் படுவார் போலும்
பருப்பதத்தே பல்லூழி நின்றார் போலும்
ஊர்மல்கு பிச்சைக் குழன்றார் போலும்
ஓத்தூர் ஒருநாளும் நீங்கார் போலுஞ்
சீர்மல்கு பாட லுகந்தார் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 5

மாவாய்ப் பிளந்துகந்த மாலுஞ் செய்ய
மலரவனுந் தாமேயாய் நின்றார் போலும்
மூவாத மேனி முதல்வர் போலும்
முதுகுன்ற மூதூ ருடையார் போலுங்
கோவாய முனிதன்மேல் வந்த கூற்றைக்
குரைகழலா லன்று குமைத்தார் போலுந்
தேவாதி தேவர்க் கரியார் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 6

கடுவெளியோ டோ ரைந்து மானார் போலுங்
காரோணத் தென்று மிருப்பார் போலும்
இடிகுரல்வாய்ப் பூதப் படையார் போலும்

ஏகம்பம் மேவி யிருந்தார் போலும்
படியொருவ ரில்லாப் படியார் போலும்
பாண்டிக் கொடுமுடியுந் தம்மூர் போலுஞ்
செடிபடுநோ யடியாரைத் தீர்ப்பார் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 7

விலையிலா ஆரஞ்சேர் மார்பர் போலும்
வெண்ணீறு மெய்க்கணிந்த விகிர்தர் போலும்
மலையினார் மங்கை மணாளர் போலும்
மாற்பேறு காப்பாய் மகிழ்ந்தார் போலுந்
தொலைவிலார் புரமூன்றுந் தொலைத்தார் போலுஞ்
சோற்றுத் துறைதுருத்தி யுள்ளார் போலுஞ்
சிலையினார் செங்க ணரவர் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 8

அல்ல லடியார்க் கறுப்பார் போலும்
அமருலகந் தம்மடைந்தார்க் காட்சி போலும்
நல்லமும் நல்லூரும் மேயார் போலும்
நள்ளாறு நாளும் பிரியார் போலும்
முல்லை முகைநகையாள் பாகர் போலும்
முன்னமே தோன்றி முளைத்தார் போலுந்
தில்லை நடமாடுந் தேவர் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 9

உறைப்புடைய இராவணன்பொன் மலையைக் கையால்
ஊக்கஞ்செய் தெடுத்தலுமே உமையா ளஞ்ச
நிறைப்பெருந்தோள் இருபதும்பொன் முடிகள் பத்தும்
நிலஞ்சேர விரல்வைத்த நிமலர் போலும்
பிறைப்பிளவு சடைக்கணிந்த பெம்மான் போலும்
பெண்ணா ணுருவாகி நின்றார் போலுஞ்
சிறப்புடைய அடியார்கட் கினியார் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 10

# திருவாசகம்/பிடித்த பத்து

உம்பர்கட்கரசே ஒழிவறநிறைந்த யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

சூரியனது கிரணம் போல, இறைவனது திருவருள் எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கியிருத்தலின், 'ஒழிவற நிறைந்த யோகமே' என்றார். 'ஊற்றையேன்' என்பது பாடம் அன்று. இறை உண்மை உணர்ந்த பின்னர்ப் புதிய இன்பம் பிறத்தலின், வம்பெனப் பழுத்து' என்றார். இனி, எல்லா நூல்களும் அவனது புகழையே பேசுதலின், 'செம்பொருட்டுணிவே' என்றார். ஆகுபெயராய்த் திருவடியைக் குறிப்பதாகிய, 'கழல்' என்னும் சொல், இங்கு இருமடி ஆகுபெயராய், அதனையுடைய இறைவனைக் குறித்தது. 'சீருடைக் கடலே' என்பதே பாடம் என்பாரும் உளர். 'சிக்கெனப் பிடித்தேன்' என்றது உறுதி பற்றி என்க.

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தறமண்ணாய் முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

சூரியனது கிரணம் போல, இறைவனது திருவருள் எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கியிருத்தலின், 'ஒழிவற நிறைந்த யோகமே' என்றார். 'ஊற்றையேன்' என்பது பாடம் அன்று. இறை உண்மை உணர்ந்த பின்னர்ப் புதிய இன்பம் பிறத்தலின், வம்பெனப் பழுத்து' என்றார். இனி, எல்லா நூல்களும் அவனது புகழையே பேசுதலின், 'செம்பொருட்டுணிவே' என்றார். ஆகுபெயராய்த் திருவடியைக் குறிப்பதாகிய, 'கழல்' என்னும் சொல், இங்கு இருமடி ஆகுபெயராய், அதனையுடைய இறைவனைக் குறித்தது. 'சீருடைக் கடலே' என்பதே பாடம் என்பாரும் உளர். 'சிக்கெனப் பிடித்தேன்' என்றது உறுதி பற்றி என்க.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

பொய்ம்மையே பெருக்குதலாவது, உயிருக்கு உறுதி பயக்கும் நன்மையான செயலைச் செய்யாது தீமையான செயலைச் செய்தலாம். பொழுதினைச் சுருக்கலாவது, வாழும் நாள்களில் பயன்தரும் நாள்கள் மிகச் சிலவாகச் செய்தல். 'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்று திருநாவுக்கரசர் அருளிச் செய்தல் காண்க. நன்மை செய்து வாழ்ந்தால் இறைவனை இம்மையே பற்றலாம் என்க

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த செல்வமே சிவபெருமானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

செங்காய் முழுச்சுவை தாராது ஆதலின், இறைவனை 'அளிந்ததோர் கனியே' என்றார். அவனது புகழைச் சொற்களால் அளவிட்டுச் சொல்ல முடியாதாதலின், 'புகழ்ச்சியைக் கடந்த போகமே' என்றும், ஆனால் அனுபவத்தில் விளங்குபவன் ஆதலின், 'யோகத்தின் பொலிவே' என்றும் கூறினார். அக்காட்சி சித்தம் தௌிந்த போது இவ்வுலகிலேயே உண்டாமாதலின், 'இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் என்றார்.

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலியேற்கு விழுமிய தளித்ததோர் அன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ செல்வமே சிவபெருமானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

இறைவன் தனக்குவமையில்லாதவனாதலின், 'ஒப்புனக்கில்லா ஒருவனே' என்றார். மெய்ப்பதமாவது, பேரின்ப நிலை. சிறப்பொன்றும் இல்லாத தமக்குச் சிறப்பினை நல்கிய

இறைவனது கருணையை, 'அன்பே' என அழைத்தார். எய்ப்பிடமாவது, தமக்கு ஒரு பற்றுக்கோடு இன்றி இளைத்த இடம்.

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்டு அளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட பிஞ்ஞகா பெரியஎம் பெருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன் செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையாதலால், 'அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்டு' என்றார். திறவிலே கண்ட காட்சியாவது, திருப்பெருந்துறையிலே யாம் 'யான் இறுதி வந்த காலத்தில் உன்னையன்றிப் பிறிதோர் துணையில்லையென்று பற்றினேன்' என்பார், 'இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்றார்.

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப் பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

உலகப் பற்றை நீக்குவதற்கு இறைவனது பற்றைக் கொள்ள வேண்டுமாதலின், அதனை இறைவன் தமக்கு நல்கியருளினான் என்பார், 'பாசவேரறுக்கும் பழம்பொருள் தன்னைப் பற்றுமா றடியனேற்கருளி' என்றார். மெய்ப்பற்றினைப் பற்றிக்கொண்ட பின்னர்ச் சித்தத்திலே தௌிவு உண்டாயிற்று என்பதை, 'சிந்தையுட் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே' என்பதால் உணர்த்தினார். தௌிவு உண்டாகிய பின்பு விளங்கிய இறைவனது சொரூப நிலையை, 'தேசுடை விளக்கே' என்றும், தடத்த நிலையை, 'செழுஞ்சுடர் மூர்த்தி' என்றும் கூறினார்.

அத்தனே அண்டார் அண்டமாய் நின்ற ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

அறிவே வடிவமாய் உள்ளவனாதலின், முதலும் முடிவும் இன்றி விளங்குகின்றான் என்பார், 'யாதும் ஈறில்லாச் சித்தனே' என்றும், உயிர்களிடத்து விருப்பமுடையவனாதலின், 'பித்தனே' என்றும், உயிரோடு கலந்திருந்தும் அவற்றில் தொடக்குறாது நிற்றலின், 'எத்தனே' என்றும் விளித்தார்.

பால்நினைத் தூட்டும் தாயினுஞ்சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

தாய் இனம், கடை, இடை, தலை என முப்பிரிவினது, குழந்தை அழுதாலும் பால் கொடுக்காதவள் கடையாய தாய்; அழும்போது கொடுப்பவள் இடையாய தாய்; காலம் அறிந்து கொடுப்பவள் தலையாய தாய். இறைவனோ, காலமறிந்து கொடுக்கும் தாயினும் மிக்க அன்புடையவன் என்பார், 'பால்நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து' என்றார். உடலை வளர்க்கும் தாயைக்காட்டிலும் உயிரை வளர்க்கும் தாயாய் இருப்பவனாதலின், இறைவன் 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி அருளினான்' என்பதும் இது பற்றியேயாம். இனி, உள்ளத்திலே இன்பத்தினை நல்கிப் புறத்தேயும் காக்கின்றான் ஆதலின், 'தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே' என்றார். 'யானும் உள்ளும் புறமும் தொடர்ந்து பற்றினேன்' என்பார், 'யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்' என்றார்.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்போடு மயக்காந் தொடக்கெலாம் அறுத்தநற்சோதி
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

விளக்கம் :

இறை நினைவால் உடம்பில் மயிர்க்கூச்செறிய இன்பம் சுரத்தலால், புலால் உடம்பு பொன்னுடம்பாக மாறும் என்பார், 'புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலா' என்றார். எலும்பு உருகுவது இறைவன் கருணையை எண்ணுவதாலாம். இறைவனால்

ஆட்கொள்ளப்பட்ட பின்னர், பிறப்பு இறப்பாகிய கட்டுகள் நீங்குமாதலின், 'பிறப்பே இறப்பொடு மயக்காந் தொடக்கெலாம் அறுத்த நற்சோதீ என்றார்.

# காரைக்கால் அம்மையார்

# திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் –

திருவாலங்காட்டுத் திருப்பதிகம்

திருவாலங்காட்டில் சிவபெருமான் நடனமாடுவதைக் கண்டு காரைக்கால் அம்மையார் பாடிய பாடல்கள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகும். [1] பதிக முறையில் பாடப்பெற்ற முதல் பாடல்கள் என்பதால் இதனை ஆதிப்பதிகம் என்றும் அழைப்பர். முதன் முறையாக இறைவனை இசையால் பாடியதால் காரைக்கால் அம்மையாருக்கு தமிழிசையின் தாய் என்ற சிறப்பு பெயர் ஏற்பட்டது. அம்மையாரைப் பின்பற்றியே இறைவனை இசையால் பாடி தேவாரம் பாடியுள்ளார்கள் தேவார மூவர்.

இந்நூல் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ள நூல்களில் ஒன்று. 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்றான பதிகம் முறையில் பாடப்பெற்றது. திருவாலங்காடு என்னும் ஊர்க் கோயிலில் குடிகொண்டுள்ள சிவபெருமான்மீது பாடப்பட்ட நூல் இது.
திருச்சிற்றம்பலம்

**11 -ஆம் திருமுறை 11.002**

**பண் - (திருவாலங்காடு (பழையனூர்)**

கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் வெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி

அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங் காடே. [1]

கள்ளிக் கவட்டிடைக் காலை நீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்து மையை
விள்ள எழுதி வெடுவெ டென்ன
நக்கு வெருண்டு விலங்கு பார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபி ணத்தீச்
சுட்டிய முற்றும் சுளிந்து பூழ்தி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங்காடே. [2]

வாகை விரிந்துவெள் நெற்றொ லிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையொ டாண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித் தோட வீசி
ஈகை படர்தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்ட கத்தே
ஆகம் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்ப னிடம் திரு ஆலங் காடே.[3]

குண்டில்ஓ மக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன அதனை முன்னே
கண்டிலோம் என்று கனன்று பேய்கள்
கையடித் தொ டிடு காட ரங்கா
மண்டலம் நின்றங் குளாளம் இட்டு,
வாதித்து, வீசி எடுத்த பாதம்
அண்டம் உறநிமிர்ந் தாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. [4]

விழுது நிணத்தை விழுங்கி யிட்டு,
வெண்தலை மாலை விரவப் பூட்டிக்

கழுதுதன் பிள்ளையைக் காளி யென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழதி துடைத்து, முலைகொ டுத்துப்
போயின தாயை வரவு காணா
தழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்
அப்ப னிடம்திரு ஆலங் கா டே [5]

பட்டடி நெட்டுகிர்ப் பாறு காற்பேய்
பருந்தொடு, கூகை, பகண்டை , ஆந்தை
குட்டி யிட, முட்டை, கூகைப் பேய்கள்
குறுநரி சென்றணங் காடு காட்டில்
பிட்டடித் துப்புறங் காட்டில் இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே
அட்டமே பாயநின் றாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. [6]

கழலும் அழல்விழிக் கொள்ளி வாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடி, ஆடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான் தடி தின்றணங் காடு காட்டில்
கழலொலி, ஓசைச் சிலம்பொ லிப்பக்
காலுயர் வட்டணை யிட்டு நட்டம்
அழலுமிழ்ந் தோரி கதிக்க ஆடும்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. [7]

நாடும், நகரும் திரிந்து சென்று,
நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத் திட்ட மாடே,
முன்னிய பேய்க்கணம் சூழச் சூழக்
காடும், கடலும், மலையும், மண்ணும்,
விண்ணும் சுழல அனல்கையேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்

அப்ப னிடம்திரு ஆலங் காடே. [8]

மேலே செல்

துத்தம், கைக்கிள்ளை, விளரி, தாரம்,
உழை, இளி ஓசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி, கொக்கரை, தக்கை யோடு,
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம், குடமுழா, மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. [9]

புந்தி கலங்கி, மதிம யங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இட்டசெந் தீவி ளக்கா
முந்தி அமரர் முழவி னோசை
திசைகது வச்சிலம் பார்க்க ஆர்க்க,
அந்தியின் மாநடம் ஆடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. [10]

ஒப்பினை யில்லவன் பேய்கள் கூடி,
ஒன்றினை ஒன்றடித் தொக்க லித்து,
பப்பினை யிட்டுப் பகண்டை பாட,
பாடிருந் தந்நரி யாழ மைப்ப,
அப்பனை அணிதிரு ஆலங் காட்டெம்
அடிகளைச் செடிதலைக் காரைக் காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்து வாரே. [11]

# நாச்சியார் திருமொழி

**நாச்சியார் திருமொழி** என்னும் நூல் வைணவ ஆழ்வார்களுள் ஒருவராகிய ஆண்டாளால் பாடப்பட்டது. வைணவ நூல்களின் தொகுப்பு ஆன நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் ஒரு பகுதியாகிய இந் நூல், அத் தொகுப்பில் 504 தொடக்கம் 646 வரையான பாடல்களாக இடம் பெறுகின்றது. 143 பாடல்களைக் கொண்ட இந்நூல், கண்ணனைத் தனது நாயகனாகக் கொண்டு அவனை அடையத் துடிக்கும் ஆண்டாளின் தவிப்பை எடுத்துக் காட்டுகின்றது. பாடல்கள் அனைத்திலும் காதல் சுவை மேலோங்கி இருப்பதைக் காணலாம்.

இந்நூல் ஒவ்வொன்றும் பத்துப் பாடல்களைக் கொண்ட 14 தலைப்புக்களில் அமைந்துள்ளன.

1. முதற் பத்துப் பாடல்கள், கண்ணனை இணக்கு எனக் காமனைத் தொழும் பாங்கில் அமைந்தவை. இவை அறுசீர் ஆசிரிய விருத்தப் பாடல்களாக அமைந்துள்ளன.
2. இரண்டாம் பத்து, சிறுமியர் மயனைத் தம் சிற்றில் சிதையேல் எனக் கேட்கும் வகையில் அமைந்தவை. இப் பாடல்கள் கலிவிருத்தங்களாக அமைந்தவை.
3. கன்னியரோடு கண்ணன் விளையாடுவதைக் கூறும் பாங்கில் அமைந்தத்து மூன்றாம் பத்து. இப் பாடல்கள் அறுசீர் ஆசிரிய விருத்தப் பாடல்கள்.
4. நான்காம் பத்துப் பாடல்கள் கூடல் குறிப்புப் பற்றியவை. இவை கலிவிருத்தப் பாடல்களால் இயற்றப்பட்டுள்ளன.
5. குயிற்பத்து என்னும் குயிலை விளித்துப் பாடும் பாடல்களாக அமைந்துள்ளவை ஐந்தாம் பத்தைச் சேர்ந்த பாடல்கள். இவை எழுசீர் ஆசிரிய விருத்தங்களாக அமைந்துள்ளன.
6. மாயவன் தன்னை மணஞ்செய்யக் கண்ட கனவைத் தோழிக்கு உரைப்பதாக அமைந்த பாடல்கள் ஆறாம் பத்தில் அமைந்துள்ளன. இவையும் கலிவிருத்தப் பாடல்கள் ஆகும்.
7. ஏழாம் பத்து, பாஞ்சசன்னியத்தைப் பதுமநாபனோடும் சுற்றமாக்கல் என்னும் தலைப்பில் அமைந்தவை. கலிவிருத்தப் பாடல்கள்.
8. மேகவிடுதூதாக அமைந்த எட்டாம் பத்து தரவுக் கொச்சகக் கலிப்பா எனும் பாவகையில் ஆக்கப்பட்டுள்ளது.
9. ஒன்பதாம் பத்தில் திருமாலிருஞ்சோலை எம்பெருமானை வழிபடும் பாங்கிலான பாடல்கள் அமைந்துள்லன. இவை கலிநிலைத்துறை எனும் பாவகையில் உள்ளன.
10. மாற்செய் வகையோடு மாற்றம் இயம்பல் என்னும் தலைப்பில் அமைந்த பாடல்களைக் கொண்ட பத்தாம் பத்து, கலிநிலைத்துறை எனும் பாவகையைச் சேர்ந்தது.

11. திருவரங்கத்துச் செல்வனைக் காமுறுவதாக அமைந்த பதினோராம் பத்துப் பாடல்கள் தரவுக் கொச்சக் கலிப்பா வகையைச் சேர்ந்தவை.
12. பன்னிரண்டாம் பத்துப் பாடல்கள் சீதரனிருந்துழிச் செலுத்துவீர் எனை எனக் கோதை தமர்க்குக் கூறிய துணிபு எனும் தலைப்பில் அறுசீர் ஆசிரிய விருத்தங்களால் ஆனவை.
13. அவலம் தணி என இறைவனைக் கோரும் பதின்மூன்றாம் பத்தும் அறுசீர் ஆசிரிய விருத்தப்பாக்களால் ஆனவையே.
14. பிருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்டது பற்றிக்கூறும் இறுதிப் பாடல்களும் அறுசீர் ஆசிரிய விருத்தப் பாக்களே.

## 1ஆம் பத்து 5ஆம் திருமொழி

## மன்னு பெரும்புகழ்

கூடல் என்பதோ உயிர் அற்றது. எனவே, அது எந்த மறுமொழியும் கூறாது இருந்தது. அதனால் உயிருள்ள எதையேனும் ஒன்றையே கண்ணன் வருவதற்காகக் கூவச் செய்ய வேண்டும் என்று எண்ணினாள் ஆண்டாள், அப்போது அவளுக்கு குயிலின் நினைவு வந்தது. எனவே அவள் குயிலைப் பார்த்து, ஓசோலைப் பொந்துகளில் வாசம் செய்யும் குயிலே, திருமாமகள் கேள்வனை விரும்பியதால், என் கைவளைகள் கழன்றுபோகும்படி உடல் தளர்ந்து மெலிந்து தாபத்தால் உருகுகிறேன். இது தகுமோ? எனவே எம்பெருமான் வரும்படி அவன் திருப்பெயர்கள் பல சொல்லிக் கூவ வேண்டும் என்று பிரார்த்திக்கிறாள் மன்னுபெரும் புகழ் மாதவன் எனத்தொடங்கும் இந்த ஐந்தாம் திருமொழியில்.

இப்படி, இந்த ஐந்தாம் பதிகம் – குயில் பாட்டாக அமைந்திருக்கிறது. இதில் மென்னடை அன்னம் என்று பெரியாழ்வாரையே குறிக்கிறாள் ஆண்டாள். இங்கே நடை என்பது நடத்தை, ஆச்சாரம் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.

**மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணி**
**வண்ணன் மணிமுடி மைந்தன்**
**தன்னை, உகந்தது காரண மாகஎன்**
**சங்கிழக் கும்வழக் குண்டே,**
**புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்**
**பொதும்பினில் வாழும் குயிலே,**
**பன்னியெப் போது மிருந்து விரைந்தென்**

**பவளவா யன்வரக் கூவாய். (2) 1**

மணிகள் பதித்த திருமுடி சூடியவனாக, நீல நிறத்துடன் நித்திய கல்யாண குணங்களால் புகழ்பெற்ற திருமகள் கேள்வனை ஆசைப்பட்டது காரணமாக என் கைவளையல்கள் கழன்று போகக் காரணம் உண்டோ ? என் செய்வேன்? புன்னை, குருக்கத்தி, கோங்கு, செருந்தி ஆகிய மரங்கள் நிறைந்த சோலைப் பொந்துகளில் வாழும் குயிலே! பவளம் போன்ற வாயினை உடைய என் நாயகன் வருமாறு எப்போதும் நீ அவன் திருப்பெயர்களைச் சொல்லி, அவன் விரைவில் வரக் கூவுவாயாக!

வெள்ளை விளிசங் கிடங்கையிற் கொண்ட
**விமல னெனக்குருக் காட்டான்,**
**உள்ளம் புகுந்தென்னை நைவித்து நாளும்**
**உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்,**
**கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்**
**களித்திசை பாடுங் குயிலே,**
**மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாதென்**
**வேங்கட வன்வரக் கூவாய். 2**

பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதற்காக அழைக்கும் வெண்மையான சங்கினைத் தன் இடதுகையில் ஏந்திய, குற்றம் சிறிதுமிலாத தூயவனான அந்தத் திருமால், தன் உருவத்தை எனக்குக் காட்டவில்லை. ஆனால், அவன் என் இதயத்தின் உள்ளே புகுந்து என்னைத் தளரச் செய்து, நாள்தோறும் என் உயிரை உருக்கி என்னைத் தத்தளிக்கச் செய்து வேடிக்கை பார்க்கின்றான். தேன் துளிர்க்கும் செண்பகப் பூவைக் கோதி, மகிழ்ச்சியுடன் இசை பாடும் குயிலே! நீ, என் அருகே இருந்து, மழலைச் சொல்லால் துன்புறுத்தாது, அந்தத் திருவேங்கடவன் வரும்படியாக கூவுவாய்!

மாதலி தேர்முன்பு கோல்கொள்ள மாயன்
**இராவணன் மேல்,சர மாரி**
**தாய்தலை யற்றற்று வீழத் தொடுத்த**
**தலைவன் வரவெங்குங் காணேன்,**
**போதலர் காவில் புதுமணம் நாறப்**
**பொறிவண்டின் காமரங் கேட்டு,உன்**

**காதலி யோடுடன் வாழ்குயி லே.என்**

**கருமாணிக் கம்வரக் கூவாய். 3**

மாதலியானவன் ஒரு கோலினைக் கையில் கொண்டு தேர் ஓட்ட, மாயாவியான இராவணன் மீது அம்பு மழை தொடுத்து அவன் நடுத் தலையை அற்று வீழும்படிச் செய்த தலைவனான எம்பெருமானின் வரவினை எந்தத் திசையிலும் காணேனே! பூக்கள் மலர்கின்ற சோலையில் புதிய வாசனை பரவவும் வரிவண்டுகள் காமரம் என்னும் பண்ணினைப் பாடக் கேட்டு, உன் பேடையோடு வாழும் குயிலே! நீ, என் கருமாணிக்கம் வரும்படியாகக் கூவ வேண்டும்.

**என்புரு கியின வேல்நெடுங் கண்கள்**

**இமைபொருந் தாபல நாளும்,**

**துன்பக் கடல்புக்கு வைகுந்த னென்பதோர்**

**தோணி பெறாதுழல் கின்றேன்,**

**அன்புடை யாரைப் பிரிவுறு நோயது**

**நீயு மறிதி குயிலே,**

**பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப்**

**புண்ணிய னைவரக் கூவாய். 4**

பிரிவுத் துயரால் எலும்பு உருகியது; வேல் கூட்டம் போன்ற நீண்ட என் கண்களோ, தூக்கம் இல்லாமல் இமை மூடவே இல்லை. பல நாள்களாய் துன்பமாகிய கடலுள் அழுந்திய நான், வைகுண்டநாதனாகிய தோணியை அடையப் பெறாமல், பிரிவுக் கடலில் தடுமாறுகிறேன். காதல் உடையவர்கள், பிரிவால் அடையும் துன்பத்தை நீ அறிய மாட்டாயா குயிலே! அழகான திருமேனி உடைய என் நாயகனான, கருடக் கொடி கொண்ட புண்ணிய மூர்த்தியை இங்கே வரும்படியாக நீ கூவ வேண்டும்.

**மென்னடை யன்னம் பரந்துவிளையாடும்**

**வில்லிபுத் தூருறை வான்றன்,**

**பொன்னடி காண்பதோ ராசயி னாலென்**

**பொருகயற் கண்ணிணை துஞ்சா,**

**இன்னடி சிலோடு பாலமு தூட்டி**

**எடுத்தவென் கோலக் கிளியை,**

**உன்னொடு தோழமை கொள்வன் குயிலே.**

**உலகளந் தான்வரக் கூவாய். (2) 5**

மென்னடை போடும் அன்னங்கள் ஓடி விளையாடும் திருவில்லிபுத்தூரில் எழுந்தருளி உள்ளவனின் அழகிய திருவடிகளைக் காணும் ஆசையினால், கயல் மீன்களைப் போன்ற என் கண்கள் கொஞ்சமும் உறங்கவே இல்லை. குயிலே! மூவுலகையும் தன் மூவடியால் அளந்த அந்தத் திரிவிக்ரமன் இங்கே வரும்படியாக நீ கூவுவாயாக! நீ அப்படிக் கூவினால், இன்சுவை கொண்ட சோற்றோடு, பால் விட்டு ஊட்டி வளர்த்த என் அழகிய கிளியை உன்னுடன் நட்பு கொள்ளச் செய்வேன்.

**எத்திசை யுமம ரர்பணிந் தேத்தும்**
**இருடீகே சன்வலி செய்ய,**
**முத்தன்ன வெண்முறு வற்செய்ய வாயும்**
**முலையு மழகழிந் தேன்நான்,**
**கொத்தலர் காவில் மணித்தடம் கண்படை**
**கொள்ளு மிளங்குயி லே,என்**
**தத்துவ னைவரக் கூகிற்றி யாகில்**
**தலையல்லால் கைம்மாறி லேனே. 6**

அகங்காரம் தொலைந்த தேவர்கள் எத்திசையும் வணங்கித் துதிக்கும் பெருமையினை உடைய இருடீகேசனான பகவான், தன்னை எனக்குக் காட்டாமல் துன்பம் செய்கின்றான். அதனால், நான் முத்துப் போன்ற பற்களும் சிவந்த உதடுகளும் முலைகளும் அழகு இழக்கும்படி, மாறுபட்டேன். பூக்கள் கொத்துக் கொத்தாக மலர்கின்ற சோலையில், அழகிய இடத்தே உறக்கம் கொள்கின்ற குயிலே! தான் உளன் என்றால், என்னையும் உள்ளவளாகச் செய்கின்ற என் தத்துவனை, மூல காரணனை இங்கே வரும்படியாகக் கூவுவாய் என்றால், என் ஆயுள் உள்ளளவும் என் தலையால் உன்னை வணங்கும் கைம்மாறு உடையவள் ஆவேன்.

**பொங்கிய பாற்கடல் பள்ளிகொள் வானைப்**
**புணர்வதோ ராசயி னால்,என்**
**கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்**
**தாவியை யாகுலஞ் செய்யும்,**
**அங்குயி லே.உனக் கென்ன மறைந்துறைவு**

**ஆழியும் சங்குமொண் தண்டும்,**
**தங்கிய கையவ னைவரக் கூவில்நீ,**
**சாலத் தருமம் பெறுதி. 7**

அலை பொங்கித் ததும்பும் அழகிய பாற்கடலில் பள்ளி கொண்டவனைச் சேரும் ஆசையினால், என் மார்புகள் பருத்துக் களித்து, உயிரை உருக்கித் துன்புறுத்துகின்றன. வெய்யில் படாமல் நிழலில் மறைந்திருப்பதால்… அழகிய குயிலே உனக்கு என்ன பயன்? சங்கு, சக்கரம், கதை தாங்கிய கைகளை உடைய பகவானை இங்கே வரும்படியாக குயிலே நீ கூவினால், மிகவும் தர்மம் செய்ததாக ஆவாய்.

**சார்ங்கம் வளைய வலிக்கும் தடக்கைச்**
**சதுரன் பொருத்த முடையன்,**
**நாங்களெம் மில்லிருந் தொட்டிய கச்சங்கம்**
**நானு மவனு மறிதும்,**
**தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும்**
**சிறுகுயி லே,திரு மாலை**
**ஆங்கு விரைந்தொல்லை கூகிற்றி யாகில்**
**அவனைநான் செய்வன காணே. 8**

சார்ங்கம் என்னும் வில்லினை வளைத்து இழுக்கும் வலிய கைகளை உடைய திருமால் வீரத்தில் காட்டும் சாமர்த்தியத்தைப் போலவே, காதல் ஊடலிலும் திறமை உள்ளவன். இனிய பழங்கள் உள்ள மாந்தோப்பில் சிவந்த தளிர்களைக் கோதும் சிறிய குயிலே! பிரிந்தால் உயிர் தரித்திருக்க மாட்டோ ம் என்று எங்களுக்குள் நாங்கள் செய்துகொண்ட ரகசிய வாக்குறுதியினை அவன் மட்டுமே அறிவான்; மற்றவர்கள் அறியமாட்டார்கள். ஆகவே, அவனை சீக்கிரம் வருமாறு விரைந்து நீ கூவுவாய் ஆகில், அவன் இங்கே வந்தபிறகு நான் படுத்தும் பாட்டைக் காண்பாய்.

**பைங்கிளி வண்ணன் சிரீதர னென்பதோர்**
**பாசத் தகப்பட்டி ருந்தேன்,**
**பொங்கொளி வண்டிரைக் கும்பொழில் வாழ்குயி**
**லே.குறிக் கொண்டிது நீகேள்,**
**சங்கொடு சக்கரத் தான்வரக் கூவுதல்**
**பொன்வளை கொண்டு தருதல்,**

**இங்குள்ள காவினில் வாழக் கருதில்**

**இரண்டத்தொன் றேல்திண்ணம் வேண்டும். 9**

பசுங்கிளி நிறம் உடைய ஸ்ரீதரன் என்னும் பாச வலையில் நான் சிக்கிக் கிடக்கின்றேன். ஒளி பொங்கும் வண்டுகள் ஒலித்து இசைபாடும் அழகிய சோலையில் வாழும் குயிலே! நான் கூறுவதை கவனமாகக் கேள். இந்தச் சோலையில் இனியும் நீ வாழவேண்டும் என்று எண்ணினால், சங்கு சக்கரம் ஏந்திய பெருமானை இங்கே வரும்படியாக நீ கூவ வேண்டும். பிரிவாற்றாமையால் உடல் மெலிந்து, அதனால் என் கைகளில் இருந்து பொன்வளைகள் கழன்றன. அவன் வருகைக்கு நீ கூவி, அதன் மூலம் என் உடல் பூரித்து, அந்த வளைகள் என் கைகளிலேயே தங்கும்படியாக நீ செய்ய வேண்டும். அல்லது அவன் உகந்த ஆபரணங்களைக் கொண்டுவந்தாவது என்னிடம் நீ கொடுக்க வேண்டும். இவை இரண்டில் ஒன்றையாவது நீ கட்டாயம் செய்ய வேண்டும்.

**அன்றுல கம்மளந் தானை யுகந்தடி-**

**மைக்கண வன்வலி செய்ய,**

**தென்றலுந் திங்களு மூடறுத் தென்னை**

**நலியும் முறைமை யறியேன்,**

**என்றுமிக் காவி லிருந்திருந் தென்னைத்**

**தகர்த்தாதே நீயும் குயிலே,**

**இன்றுநா ராயண னைவரக் கூவாயேல்**

**இங்குத்தை நின்றும் துரப்பன். 10**

தன்னை கொஞ்சமும் விரும்பியிராத, செருக்கு மிகுந்திருந்த மகாபலிச் சக்ரவர்த்தியின் தலையிலேயே தன் திருவடிகளை வைத்து, அவனை அடிமையாக்கி இந்த உலகத்தையும் அளந்தான் அந்தத் திருமால். அவனைப் பெற்றால் அன்றி, உயிர் வாழ முடியாத பாக்கியத்தை அன்றோ இந்தத் திருமாலின் விஷயத்தில் நான் ஆசைப்பட்டேன். ஆனால், அவனோ வஞ்சனை செய்து விட்டான். தென்றலும் சந்திரனும் என்னைப் பிளந்து துன்புறுத்தும் நியாயத்தை நான் அறியேன். ஓ குயிலே! நீ என்றும் இந்தச் சோலையில் இருந்துகொண்டு, இடைவிடாமல் என்னைத் துன்புறுத்தாதே. ஸ்ரீமந் நாராயணன் இங்கே வரும்படியாக இன்று நீ கூவாவிட்டால், இங்கிருந்து உன்னைத் துரத்தி விடுவேன்.

**விண்ணுற நீண்டடி தாவிய மைந்தனை**

**வேற்கண் மடந்தை விரும்பி,**

**கண்ணுற வென்கடல் வண்ணனைக் கூவு**

**கருங்குயிலே என்ற மாற்றம்,**

**பண்ணுற நான்மறை யோர்புது வைமன்னன்**

**பட்டர்பி ரான்கோதை சொன்ன,**

**நண்ணுறு வாசக மாலைவல் லார்நமோ-**

**நாராய ணாயவென் பாரே. (2) 11**

வானில் தன் திருவடியை நீட்டி, உலகம் அளந்த உத்தமனை விரும்பி, வேல் போன்ற கண்ணழகும், பெண்மையும் நிரம்பிய ஆண்டாள், கருங்குயிலே, என் கடல்வண்ணனை வரும்படியாக நீ கூவு என்று பாடினாள். இசையுடன் நான்கு வேதங்களையும் ஓதும் அந்தணர் வாழ்கின்ற ஸ்ரீவில்லிபுத்தூர் பட்டர்பிரானின் மகளான கோதை அருளிய இந்த வாசகங்களை ஓதுபவர்கள், நமோ நாராயணாய என்று பகவானின் கைங்கரியத்திலே திளைத்திருப்பர்.

# நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் –

# ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

## முதல் பத்து

### முதல் திருமொழி - வண்ண மாடங்கள்

### (கண்ணன் திருவவதாரச் சிறப்பு)

கலிவிருத்தம்

வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூர்

கண்ணன்கேசவன் நம்பிபிறந்தினில்

எண்ணெய்சுண்ணம் எதிரெதிர்தூவிடக்

கண்ணன்முற்றம் கலந்துஅளராயிற்றே. 1

ஓடுவார்விழுவார் உகந்தாலிப்பார்
நாடுவார்நம்பிரான் எங்குத்தானென்பார்
பாடுவார்களும் பல்பறைகொட்டநின்று
ஆடுவார்களும் ஆயிற்றுஆய்ப்பாடியே. 2

பேணிச்சீருடைப் பிள்ளைபிறந்தினில்
காணத்தாம்புகுவார் புக்குப்போதுவார்
ஆணொப்பார் இவன்நேரில்லைகாண் திரு
வோணத்தா னுலகாளுமென்பார்களே. 3

உறியைமுற்றத்து உருட்டிநின்றாடுவார்
நறுநெய்பால்தயிர் நன்றாகத்தூவுவார்
செறிமென்கூந்தல் அவிழத்திளைத்து எங்கும்
அறிவழிந்தனர் ஆய்ப்பாடியரே. 4

கொண்டதாளுறி கோலக்கொடுமழு
தண்டினர் பறியோலைச்சயனத்தர்
விண்டமுல்லை யரும்பன்னபல்லினர்
அண்டர்மிண்டிப்புகுந்து நெய்யாடினார். 5

கையும்காலும்நிமிர்த்துக் கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறுமஞ்சளால்
ஐயநாவழித்தாளுக்கு அங்காந்திட
வையமேழும்கண்டாள் பிள்ளைவாயுளே. 6

வாயுள்வையகம்கண்ட மடநல்லார்
ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம்
பாயசீருடைப் பண்புடைப்பாலகன்
மாயனென்று மகிழ்ந்தனர்மாதரே. 7

பத்துநாளும்கடந்த இரண்டாநாள்
எத்திசையும் சயமரம்கோடித்து
மத்தமாமலை தாங்கியமைந்தனை
உத்தானம்செய்து உகந்தனர்ஆயரே. 8

கிடக்கில் தொட்டில்கிழியஉதைத்திடும்
எடுத்துக்கொள்ளில் மருங்கையிறுத்திடும்
ஒடுக்கிப்புல்கில் உதரத்தேபாய்ந்திடும்
மிடுக்கிலாமையால் நான்மெலிந்தேன்நங்காய் 9

செந்நெலார்வயல்சூழ் திருக்கோட்டியூர்
மன்னுநாரணன் நம்பிபிறந்தமை
மின்னுநூல் விட்டுசித்தன்விரித்த இப்
பன்னுபாடல்வல்லார்க்கு இல்லைபாவமே. 10

# மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி –

# பெரியாழ்வார் திருமொழி 1.3

## முதற் பத்து

## மாணிக்கங்கட்டி

'நாலாயிரம் கற்போம்' பத்தித் தொடரில் நான்காவது பகுதி இது. பெரியாழ்வார் திருமொழியின் முதல் பத்தின் மூன்றாம் திருமொழி இந்த 'மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி' என்று தொடங்கும் பத்துப் பாசுரங்கள்.

இந்தப் பத்துப் பாசுரங்களில் திருவாய்ப்பாடியில் எம்பெருமான் கண்ணன் பிறந்திருந்த போது அவனை யசோதை தாலாட்டியதைக் கூறுகிறார் பெரியாழ்வார்.

மக்கட் பேறு பெற்று மகிழும் இக்காலப் பெண்களுக்கு நல்ல வழிகாட்டி!தாலாட்டுப் பாடலிலும் பகவத் விஷயம் கலந்திருக்க வேண்டாமா!இப்பாடல்களையே தாலாட்டுப் பாடல்களாகப் பாடலாமே!இப்பாடல்களைக் கேட்டுப் பழகும் குழந்தைகள் பகவானின் திருவருளைப் பெறுவது திண்ணம். அவர்களுக்கு வாழ்வில் துன்பமே ஏற்படாது என்கிறாள் தெய்வ நங்கை யசோதை!

திருத்தாலாட்டு
(கண்ணனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுதல்)

கலித்தாழிசை

**பிரமன் விடுதந்த தொட்டில்திருத்தாலாட்டு**

மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ வையமளந்தானே தாலேலோ

## அரனளித்த அரைவடம்

உடையார் கனமணியோடு ஒண்மா துளம்பூ

இடைவிரவிக் கோத்த எழில்தெழ் கினோடு

விடையேறு காபாலி ஈசன் விடுதந்தான்

உடையாய்அழேல் தாலேலோ உலகமளந்தானே தாலேலோ

## இந்திரனீந்த கிண்கிணி

எந்தம் பிரானார் எழில்திரு மார்வர்க்கு

சந்த மழகிய தாமரைத் தாளர்க்கு

இந்திரன் றானும் எழிலுடைக் கிண்கிணி

தந்துவனாய்நின்றான் தாலேலோ தாமரைக்கண்ணனே தாலேலோ

## அமரர் தந்த அரைஞாண்

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்

அங்கைச் சுரிவளையும் நாணும் அரைத்தொடரும்

அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்

செங்கண்கருமுகிலே தாலேலோ தேவகிசிங்கமே தாலேலோ

## குபேரன் தந்த முத்துவடம்

எழிலார்திரு மார்வர்க்கு ஏற்கு மிவையென்று

அழகியவைம் படையும் ஆரமும் கொண்டு

வழுவில் கொடையான் வயிச்சி ரவணன்

தொழுதுவனாய்நின்றான் தாலேலோ தூமணிவண்ணனே தாலேலோ

## வருணன் அளித்த சாதிப்பவளம்

ஓதக் கடலின் ஒளிமுத்தி னாரமும்

சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்

மாதக்க வெனறு வருணன் விடுதந்தான்

சோதிச்சுடர்முடியாய் தாலேலோ சுந்தரத்தோளனே தாலேலோ

## திருமங்கை அனுப்பிய திருத்துழாய் மாலை

கானார் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேனார் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்
கோனே அழேல்அழேல் தாலேலோ குடந்தைக்கிடந்தானே தாலேலோ

## பூதேவி கொடுத்தனுப்பிய உச்சிமணிச் சுட்டி

கச்சொடு பொற்சுரிகை காம்பு கனவளை
உச்சிமணிச் சுட்டில் ஒண்டா நிரைப்பொற்பூ
அச்சுதனுக் கென்று அவனியாள் போத்தந்தாள்
நச்சுமுலையுண்டாய் தாலேலோ நாராயணாஅழேல் தாலேலோ

## துர்க்கை தந்த பொருள்கள்

மெய்திமிரும் நானப் பொடியோடு மஞ்சளும்
செய்யதடங் கண்ணுக்கு அஞ்சனமும் சிந்தூரமும்
வெய்யகலைப் பாகி கொண்டுஉவளாய் நின்றாள்
ஐயாஅழேல்அழேல் தாலேலோ அரங்கத்தணையானே தாலேலோ

**தரவு கொச்சக கலிப்பா**

## இடரில்லை

வஞ்சனையால் வந்த பேய்ச்சி முலையுண்ட
அஞ்சன வண்ணனை ஆய்ச்சி தாலாட்டிய
செஞ்சொல் மறையவர் சேர்புதுவைப் பட்டன்சொல்
எஞ்சாமை வல்லவர்க்கு இல்லை இடர்தானே.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

# முத்தொள்ளாயிரம்

இந்நூல் அகமும் புறமும் பற்றிய பாடல்களைக் கொண்டதாகும். மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிய தொள்ளாயிரம் பாடல்கள் வீதம் மூன்று தொள்ளாயிரம் பாடல்கள் இயற்றப்பட்டன. அதனால் இது முத்தொள்ளாயிரம் எனப் பெயர் பெற்றது. இவற்றில் தற்சமயம் கிடைக்கப்பெற்றவை 109 பாடல்கள் மட்டுமே. அவை கடவுள் வாழ்த்து - 1, சேரனை குறிக்கும் பாடல்கள் - 22, சோழனைக் குறிக்கும் பாடல்கள் - 29, பாண்டியனைக் குறிக்கும் பாடல்கள் - 57 ஆகும். இப்பாடல்களை இயற்றிய புலவர்களின் பெயர்களும் காலமும் அறியப்படவில்லை.

இது வெண்பா யாப்பில் எழுதப்பட்ட நூல், இது சேர சோழ பாண்டியர்களின் புகழ் பாடுவது. எந்தக் குறிப்பிட்ட மன்னனையும் இது பாடவில்லை. மூன்று குடியினருக்கும் உரிய கோதை, கிள்ளி, மாறன் முதலான பொதுவான பெயர்களே இதில் இடம் பெற்றுள்ளன. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் தொகுதியில் இருந்து எடுக்கப்பட்ட 108 செய்யுட்களே இன்று முத்தொள்ளாயிரம் என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்நூல் தொல்காப்பியர் குறிப்பிட்ட விருந்து என்னும் வகையைச் சாரும்.

## பெயர்க்காரணம்

இந்நூலின் பெயர் இருவகைகளில் விளக்கப்படுகிறது. மூன்று வேந்தர்களையும் பற்றிய 900 பாடல்கள் கொண்டது என்பது ஒரு சாரார் கருத்து. மூவேந்தருள் ஒவ்வொருவரையும் தனித்தனியே தொள்ளாயிரம் பாடல்களில் புகழும் நூல் இது என்பது இன்னொரு சாரார் கருத்து. இவ்விரண்டாவது கருத்தின் படி இந்நூலுக்குரிய செய்யுட்கள் 2700 ஆகும்.

இவற்றுள் முதற் கருத்தே ஏற்புடையது என்கின்றார் இலக்கண விளக்கத்தின் ஆசிரியர். எண் இலக்கியத்திற்கு உதாரணம் கூறும்போது, அது பத்து முதல் ஆயிரம் பாடல்கள் கொண்டது என்று குறிப்பிட்டு, அரும்பைத் தொள்ளாயிரம் என்பதனையும் முத்தொள்ளாயிரத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

## நூலாசிரியர்

இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், பதினெண்கீழ்க்கணக்கு நூலாசிரியர்களோடு முத்தொள்ளாயிரத்தின்

ஆசிரியரையும் சேர்த்துப் பிற சான்றோர் எனக் குறிப்பிட்டார். எனவே இவர் சங்கப் புலவர் அல்லர் என்பது வெளிப்படையாகும். ஆராய்ச்சி அறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார். இந்நூலின் உள்ள சில அகச் சான்றுகளை எடுத்துக்காட்டி, இந்நூலாசிரியரை கி.பி. 5ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தவர் என்கின்றார்.

### நூலாசிரியர் சமயம்

இந்நூலின் கடவுள் வாழ்த்து, சிவபெருமான் பற்றியது. சிவபெருமான் நாள்மீன்களையும், திங்களையும், சூரியனையும் படைத்தவன் என்றும், ஆனால் உலகம் அவனை ஆதிரையான் என்பது வியப்பானது என்றும் கூறுகின்றார் ஆசிரியர். மேலும், தாம் பாண்டியனைப் புகழ்ந்து பாடும் பாட்டு, மயிலை ஊர்தியாகக் கொண்ட முருகப்பெருமானைக் கடப்ப மலர் தூவிப் பாடிப் புகழ்தலை ஒத்தது என்கிறார். இதனால் இவர் சைவ சமயச் சார்புடையவர் என்பது விளங்கும்.

### பாடுபொருள்

முத்தொள்ளாயிரம் மூவேந்தர் புகழ்பாடுவது என்று முன்பே கூறப்பட்டது. மன்னர்களின் வீரம், கொடை, தலைநகர், அவர்கள் குதிரைகளின் மறம், களிறுகளின் மறம் ஆகியவையும், பகை மன்னர்களின் நாடுகளை அழித்துப் புகழ் பெற்றமையும், அவர்களிடம் திறை கொண்டமையும் புகழப்பட்டுள்ளன. மன்னர்களைப் புகழ்வதற்குக் கைக்கிளை என்னும் அகத்திணைப் பிரிவை இவ்வாசிரியர் பயன்படுத்தியுள்ளார். இடைக்காலத்துச் சமயச் சான்றோர்கள் இம்மரபைப் பின்பற்றியது நினைவிருக்கலாம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் அகத்துறைகளைப் பயன்படுத்தி ஆன்மா இறைவனோடு கூடுவதற்குத் துடிக்கும் துடிப்பினை வெளியிட்டனர். அம்மரபினைப் பின்பற்றிய முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியரும் சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூன்று வேந்தர்களின் பாலும் தமக்குள்ள அன்பினை, ஒருதலைக் காதல் கொண்ட பெண்களின் கூற்றாகப் பாடி வெற்றி கண்டுள்ளார். இந்நூலின் பெரும் பகுதி பெண்பால் கைக்கிளையாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கைக்கிளைப் பாடல்

இந்நூலின் பெரும்பாலான செய்யுட்கள் கைக்கிளை சார்ந்தன என்று பார்த்தோம். அவற்றுள் ஒன்றை இங்கு உதாரணமாகக் காணலாம்.

பாண்டியன் நகர் வலம் வந்தான். அவனை ஒரு கன்னிப் பெண் கண்டாள். உடன் அவன்பால் மட்டில்லாக் காதல் கொண்டாள். அதன் காரணமாக உடல் முழுதும் பசலை படர்ந்தது. தன் உடம்பிலே பசலை படரக் காரணம் தன் கண்கள் அவனைக் கண்டமையே என்று எண்ணினாள். அவ்வாறெனில் அதற்குரிய தண்டனையை அடைய வேண்டியவை அக்கண்களல்லவா? ஆனால் அதற்கு மாறாக, ஒரு பாவமும் அறியாத அவள் தோள்களல்லவா தண்டனை பெற்றன! இஃது எவ்வாறு என்றால் உழுத்தஞ்செடி வளர்ந்த வயலில் மேய்ந்து அழிவு செய்தது ஊர்க்கன்றுகளாக இருக்க, ஒன்றும் அறியாத கழுதையின் காதை அறுத்துத் தண்டித்தது போன்றது என்று நினைத்து வருந்தினாள். இப்பொருள் அமைந்த பாட்டு வருமாறு:

உழுத உழுத்தஞ்செய் ஊர்க்கன்று மேயக்
கழுதை செவி அரிந்தற்றால் - வழுதியைக்
கண்ட நம் கண்கள் இருப்பப் பெரும் பணைத்தோள்
கொண்டன மன்னோ பசப்பு (60)

(செய் = வயல்; பணைத்தோள் = மூங்கில் போன்ற தோள்; பசப்பு = மேனியில் தோன்றும் நிற வேறுபாடு)

## கற்பனை வளம்

கற்பனையே கவிதைக்கு உயிர். முத்தொள்ளாயிரச் செய்யுள் ஒவ்வொன்றும் கற்பனை ஊற்று என்றால் அது மிகையாகாது. சேர நாட்டின் வளத்தினையும், மக்களின் அச்சமற்ற வாழ்வினையும் ஒரு சேரப் புகழும் ஆசிரியர் பின் வருமாறு பாடுகின்றார்:

அள்ளல் பழனத்து அரக்கு ஆம்பல் வாய் அவிழ
வெள்ளம் தீப்பட்டது என வெரீ இ, - புள்ளினம் தம்
கைச் சிறகால் பார்ப்பு ஒடுக்கும் கௌவை உடைத்து அரோ
நச்சிலை வேல் கோக் கோதை நாடு

(வாய்அவிழ = விரிய; வெரீ இ = அஞ்சி; புள்ளினம் = பறவையினம்; பார்ப்பு = குஞ்சு; கௌவை = ஒலி)

## இதன் பொருள்

சேறு நிறைந்த பொய்கைகள் சேர மன்னன் நாட்டில் மிகுதி. அப்பொய்கைகளில் அரக்கு நிறம் கொண்ட செவ்வல்லி மலர்கள் பூத்துள்ளன. அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்து விட்டது என்று எண்ணின. தம் குஞ்சுகளைத் தீயிலிருந்து காப்பாற்ற

நினைத்துத் தம் கைகளான சிறகுகளைப் படபடவென அடித்து அவற்றை அணைத்துக் கொண்டன. இந்த ஆரவாரம் தவிர, மக்கள் துயர் மிகுதியால் செய்யும் ஆரவாரத்தை, சேரநாட்டில் காண்பது அரிது என்கின்றார் புலவர். இதற்குக் காரணம் கூறுவார் போல, நச்சிலை வேல் கோக்கோதை என்று மன்னனைக் குறிப்பிடுகின்றார். அவன் ஏந்திய வேல் நஞ்சு பூசப்பட்டிருப்பது; எனவே, பகைவர் அவன்பால் பேரச்சம் கொண்டுள்ளனர் என்பது குறிப்பு.

### கூடிழந்த சிலந்தி

சோழன் பிறந்த நாள் வருகின்றது. அது இரேவதி விண்மீன் சந்திரனோடு கூடி நிற்கும் நல்ல நாள். அரண்மனைக்குப் பரிசிலர் வருகின்றனர். வருவோர்க்கெல்லாம் உயர்ந்த பரிசிலை வாரி வழங்குகின்றான் சோழன். ஆம்! அந்தணர் வந்தனர்; அவர்கள் ஆவையும் பொன்னையும் வாங்கிச் சென்றனர். நாவன்மை மிக்க புலவர்கள் வந்தனர்; அவர்கள் மந்தர மலைபோல் உயர்ந்த களிறுகளைப் பெற்றுத் திரும்பினர். இங்ஙனம் மனிதரெல்லாம் பரிசு பெற்றுத் திரும்பிய நாள், சோழன் அரண்மனையில் இருந்த சிலந்திப்பூச்சிக்கு மட்டும் சோக நாளாயிற்றாம்! ஆம்! அது தானே கட்டிக் கொண்டு வாழ்ந்த தன் வீடாகிய கூட்டை இழந்து விட்டது! ஒட்டடை நீக்கப் பெற்றுத் தூய்மையாயிற்று என்ற செய்தியையே புலவர் என்னோ! சிலம்பிதன் கூடு இழந்தவாறு! என்று நயமாகப் புலப்படுத்தினார்.

### பண்பாட்டுச் செய்திகள்

முத்தொள்ளாயிரம் எழுந்த காலத்துத் தமிழர்தம் பண்பாட்டு நிலையை அறிய, அதன் ஆசிரியர் நமக்கு வாய்ப்பளித்துள்ளார்.

அசுவனி முதலாக எண்ணப்படும் 27 விண்மீன்கள் பற்றிய அறிவு அன்று தமிழர்க்கு இருந்தது. மன்னிய நாண்மீன், ஆதிரையான் (1) தென்னன் திருஉத்திராட நாள் (7) என்ற குறிப்புகளை நோக்குக.

பெண்கள் குங்குமச் சாந்தினை அணிந்தனர் (9). கணவனை இழந்த பெண் எரி மூழ்கி இறக்கும் வழக்கம் இருந்தது (19). நீரில் நின்று தவம் செய்தனர் (25). உலக்கை கொண்டு குற்றும்பொழுது பாடல் இசைத்தல் உண்டு (34). வேட்டுவர்கள் பறவைகளைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வைத்தனர் (35), முதலான செய்திகள் இதனுள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## கடவுள்வாழ்த்து

மன்னிய நாள்மீன் மதிகனலி என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்-பின்னரும்
ஆதிரையான் ஆதிரையான் என்றென்றயருமால்
ஊர்திரைநீர் வேலி உலகு! 1

## சேரன்

தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே-ஆய்மலர்
வண்டுலாஅங் கண்ணி வயமான்தேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு. 2

வாமான்தேர்க் கோதையை மான்தேர்மேற் கண்டவர்
மாமையே அன்றோ இழப்பது-மாமையின்
பன்னூறு கோடி பழுதோ என் மேனியில்
பொன்னூறி யன்ன பசப்பு. 3

கடல்தானைக் கோதையைக் காண்கொடாள் வீணில்
அடைத்தாள் தனிக்கதவம் அன்னை-அடைக்குமேல்
ஆயிழையாய்! என்னை அவன்மேல் எடுத்துரைப்பார்
வாயும் அடைக்குமோ தான். 4

வரைபொரு நீள்மார்பின் வட்கார் வணக்கும்
நிரைபொரு வேல் மாந்தைக் கோவே!-நிரை வளையார்
தங்கோலம் வவ்வுதல் ஆமோ அவர் தாய்மார்
செங்கோலன் அல்லன் என. 5

புன்னாகச் சோலை புனல்தெங்கு சூழ்மாந்தை
நன்னாகம் நின்றலரும் நல்நாடன்-என்னாகம்
கங்குல் ஒருநாள் கனவினுள் தைவந்தான்
என்கொல் இவரறிந்த வாறு. 6

கடும்பனித் திங்கள்தன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொல் தோழி!-நெடுஞ்சினவேல்
ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையை
காணிய சென்றவென் நெஞ்சு. 7

ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன்-நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் நெஞ்சு. 8

வருக குடநாடன் வஞ்சிக்கோ மான் என்று
அருகலர் எல்லாம் அறிய-ஒருகலாம்
உண்டா யிருக்கஅவ் ஒண்தொடியாள் மற்றவனைக்
கண்டாள் ஒழிந்தாள் கலாம். 9

இவன்என் நலங்கவர்ந்த கள்வன் இவன் எனது
நெஞ்சம் நிறையழித்த களவனென்று-அஞ்சொலாய்!
செல்லு நெறியெலாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது. 10

காராட் டுதிரம் தூய்உய் அன்னை களன் இழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ!-போராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கென்
நெஞ்சங் களங்கொண்ட நோய்! 11

மல்லல்நீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினும்
சொல்லவே வேண்டும் நமகுறை-நல்ல
திலகங் கிடந்த திருநுதலாய் அஃதால்
உலகங் கிடந்த இயல்பு. 12

நீரும் நிழலும்போல் நீண்ட அருளுடைய
ஊரிரே என்னை உயக்கொண்மின்-போரிற்

புகலும் களியானைப் புழியர் கோக் கோதைக்கு
அழலுமென் நெஞ்சங் கிடந்து. 13

அள்ளல் பழனத் தரக்காம்பல் வாய் அவிழ
வெள்ளந்தீப் பட்டதென வெரீ இப்-புள்ளினம்தம்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு. 14

களிகள் களிகட்கு நீட்டத்தம் கையால்
களிகள் விதிர்த்திட்ட வெங்கள்-துளிகலந்து
ஓங்கெழில் யானை மிதிப்பச்சே றாகுமே
பும்பொழில் வஞ்சி அகம். 15

வானிற்கு வையகம் போன்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர்-வானத்து
மீன்சேர் மதியனையான் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென்பான். 16

பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்
மல்லல் நெடுமதில் வாங்குவில் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு. 17

அரும்பவிழ் தார்க் கோதை அரசெறிந்த ஒள்வேல்
பெரும்புலவும் செஞ்சாந்தும் நாறிச்-சுரும்பொடு
வண்டாடு பக்கமும் உண்டு குறுநரி
கொண்டாடு பக்கமும் உண்டு. 18

வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால்-தேறாது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டுந்தன் கை. 19

அயிற்கதவம் பாய்ந்துழக்கி ஆற்றல்சால் மன்னர்
எயிற்கதவம் கோத்தெடுத்த கோட்டால்-பனிக்கடலுள்
பாய்தோய்ந்த நாவாய்போல் தோன்றுமே எங்கோமான்
காய்சினதேற் கோதை களிறு! 20

மரகதப்பூண் மன்னவர் தோள்வளை கீழா
வயிரக் கடக்கை வாங்கித்-துயருழந்து
புண்ணுற் றழைக்கும் குறுநரித்தே பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம். 21

கரிபரந்து எங்கும் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையும் கூடி-எரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோள் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார் நாடு. 22

வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளை பூத்து
ஊரறியலாகா கிடந்தனவே-போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினார் நாடு. 23

## சோழன்

திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்-உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் தமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு. 24

குதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை பெறுகென்றால் அன்னை-அதுபோய்
விளைந்தவா இன்று! வியன் கானல் வெண்தேர்த்
துலங்குநீர் மாமருட்டி அற்று. 25

சுடரிலைவேற் சோழன் தன் பாடலம் ஏறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்-தொடர்புடைய
நீர் வலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயில்தொறுங் கண். 26

அன்னையும் கோல்கொண் டலைக்கும் அயலாரும்
என்னை அழியுஞ்சொற் சொல்லுவர்-நுண்ணிலைய
தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
திண்தேர் வளவன் திறத்து. 27

அலங்குதார்ச் செம்பியன் ஆடெழில்தோள் நோக்கி
விலங்கியான் வேண்டா வெனினும்-நலந்தொலைந்து
பீர்மேற் கொளல் உற்ற பேதையர்க் கென்வாய்ச்சொல்
நீர்மே லெழுந்த நெருப்பு. 28

நாணொருபால் வாங்க நலனொருபால் உள்நெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற-யாமத்
திருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போலத்
திரிதரும் பேருமென் நெஞ்சு. 29

ஊடல் எனஒன்று தோன்றி அல்ருறூஉம்
கூடல் இழந்தேன் கொடியன்னாய்!-நீடெங்கின்
பாளையிற் தேன் தொடுக்கும் பாய்புனல் நீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று. 30

புலவி புறக்கொடுப்பன் புல்லிடின் நாண் நிற்பன்
கலவி களிமயங்கிக் காணேன்-நிலவியசீர்
மண்ணாளுஞ் செங்கோல் வளவனை யானிதன்றோ
கண்ணாரக் கண்டறியா வாறு. 31

கனவினுள் காண்கொடா கண்ணும் கலந்த
நனவினுள் முனவிலக்கு நாணும்-இனவங்கம்

பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானார்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று. 32

கண்டன உண்கண் கலந்தன நல்நெஞ்சம்
தண்டப் படுவ தடமென்தோள்-கண்டாய்
உலாஅ மறுகில் உறையூர் வளவற்
கெலாஅ முறைகிடந்த வாறு. 33

என்னெஞ்சும் நாணு நலனும் இவையெல்லாம்
மன்னன் புனல்நாடன் வௌவினான்-என்னே
அரவகல் அல்குலாய் ஆறில் ஒன் றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள். 34

தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி இளவளவன்
மண்ணகங் காவலனே யென்பரால்-மண்ணகங்
காவலனே யானக்காற் காவானோ! மாலைவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல். 35

அறைபறை யானை அலங்குதார்க் கிள்ளி
முறைசெயும் என்பரால் தோழி-இறையிறந்த
அங்கோல் அணிவளையே சொல்லாதோ மற்றவன்
சென்கோன்மை செந்நின்ற வாறு. 36

நீள்நீலத் தாரிவளவன் நின்மேலான் ஆகவும்
நாணீர்மை யின்றி நடத்தியால்-நீள்நிலம்
கண்தன்மை கொண்டலரும் காவிரி நீர்நாட்டுப்
பெண்தன்மை இல்லை பிடி. 37

செங்கால் மடநாராய் தென்னுறந்தை சேறியேல்
நின்கால்மேல் வைப்பன் என் கையிரண்டும்-நன்பால்
கரை உறிஞ்சி மீன் பிறழும் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய். 38

வரக்கண்டு நாணாதே வல்லையால் நெஞ்சே
மரக்கண்ணோ மண் ஆள்வார் கண்ணென்-றிரக்கண்டாய்
வாள் உழுவை வெல்கொடியான் வண்புனல்நீர் நாடற்கென்
தோள் அழுவம் தோன்றத் தொழுது. 39

பேயோ பெருந்தண் பனிவாடாய்! பெண்பிறந்தா
ரேயோ உனக்கிங் கிறைக்குடிகள்-நீயோ
களிபடுமால் யானைக் கடுமான்தேர்க் கிள்ளி
அளியிடை அற்றம் பார்ப் பாய். 40

நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையும் நீலமும் தைவந்-தியாமத்து
வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு. 41

தானைகொண் டோ டுவ தாயின்தன் செங்கோன்மை
சேனை யறியக் கிளவேனோ-யானை
பிடிவீசும் வண்தடக்கைப் பெய்தண்தார்க் கிள்ளி
நெடுவீதி நேர்பட்ட போது 42

காவல் உழவர் களத்தகத்துப் போர் ஏறி
நாவலோஓ என்றிசைக்கும் நாளோதை-காவலன்தன்
கொல்யானை மேலிருந்து கூற்றி சைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு. 43

மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்
சால மிகுவதேர் தன்மைத்தால்-காலையே
வில்பயில் வானகம் போலுமே வேல்வளவன்
பொற்பார் உறந்தை அகம். 44

மந்தரங்க் காம்பா மணிவிசும் போலையாத்
திங்கள் அதற்கோர் திலதமா எங்கணும்

முற்றுநீர் வைய முழுதும் நிழற்றுமே
கொற்றப் போர்க் கிள்ளி குடை. 45

அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்-எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு. 46

நின்றீமின் மன்னீர் நெருநல் திறைகொணர்ந்து
முன்தந்த மன்னர் முடிதாக்க-இன்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வி இலனே
பெருந்தண் உறந்தையார் கோ. 47

கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்-பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு. 48

கச்சி ஒருகால் மிதியா ஒருகாலால்
தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்-பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமேநங்
கோழியர்கோக் கிள்ளி களிறு. 49

பற்றினம் ஆர்ப்பப் பருந்து வழிப்படர
நாற்றிசையும் ஓடி நரிகதிப்ப-ஆற்ற
அலங்கலம் பேய்மகளிர் ஆட வருமே
இலங்கிலைவேற் கிள்ளி களிறு. 50

முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மட்டி-எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம். 51

இரியல் மகளிர் இலைஞெமலுள் ஈன்ற
வரி இளம் செங்காற் குழவி-அரையிரவில்
ஊமந்தா ராட்ட உறங்கிற்றே! செம்பியன் தன்
நாமம்பா ராட்டாதார் நாடு. 52

## பாண்டியன்

காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்து
யாப்படங்க ஓடி அடைத்தபின் மாக்கடுங்கோன்
நன்னலம் காணக் கதவம் துளைதொட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி! 53

வளையவாய் நீண்டதோள் வாட்கணாய் அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோர்-தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு நோக்கல்என் பாள். 54

கோட்டெங்கு சூழ்கூடற் கோமானைக் கூடவென
வேட்டாங்குச் சென்றெவன் நெஞ்சறியாள் கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
வெறுங்கூடு காவல்கொண்டாள். 55

களியானைத் தென்னன் இளங்கோவென் றெள்ளிப்
பணியாரே தம்பார் இழக்க-அணியாகங்
கைதொழு தேனும் இழக்கோ நறுமாவின்
கொய்தளிர் அன்ன நிறம். 56
வழுவில் எம் வீதியுள் மாறன் வருங்கால்
தொழுதேனைத் தோள்நலமுங் கொண்டான்-இமிழ்திரைக்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூசல் இனி. 57

தானேல் தனிக்குடைக் காவலனால் காப்பதுவும்
வானேற்ற வையகம் எல்லாமால்-யானோ
எளியேன் ஓர் பெண்பாலேன் ஈர்ந்தண்தார் மாறன்
அளியானேல் அன்றென்பார் ஆர். 58

மன்னுயிர் காதல் தனதான அவ்வுயிருள்
என்னுயிரும் எண்ணப் படுமாயின்-என்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
நீரொழுகப் பாலொழுகா வாறு. 59

புகுவார்க் கிடங்கொடா போதுவார்க் கொல்கா
நகுவாரை நாணி மறையா-இருகரையின்
ஏமான் பிணைபோல நின்றதே கூடலார்
கோமான்பின் சென்றவென் நெஞ்சு. 60

களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை
அளியான் அளிப்பானே போன்றான் - தெளியாதே
செங்காந்தள் மென்விரலாற் சேக்கை தடவந்தேன்
என்காண்பேன் என் அலால் யான். 61

கனவை நனவென் றெதிர்விழிக்கும் காணும்
நனவில் எதிர்விழிக்க நாணும்-புனையிழாய்
என்கண் இவையானால் எவ்வாறே மாமாறன்
தண்கண் அருள்பெறுமா தான். 62

தளையவிழும் பூங்கோதைத் தாயரே ஆவி
களையினும் என் கைதிறந்து காட்டேன்-வளைகொடுபோம்
வன்கண்ணன் வாள்மாறன் மால்யானை தன்னுடன்வந்
தென்கண் புகுந்தான் இரா. 63

ஓராற்றல் எண்கண் இமைபொருந்த அந்நிலையே
கூரார்வேல் மாறன் என் கைப்பற்ற-வாரா
நனவென் றெழுந்திருந்தேன் நல்வினையொன் றில்லேன்

கனவும் இழந்திருந்த வாறு. 64

கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலை நின்ற தவங்கொலோ கூர்நுனைவேலி
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம். 65

அறிவாரார் யாமொருநாட் பெண்டிரே மாகச்
செறிவார் தலைமேல் நடந்து-மறிதிரை
மாட முரிஞ்சும் மதுரையார் கோமானைக்
கூட வொருநாட் பெற. 66

கைய தவன்கடலுள் சங்கமால் பூண்டதுவும்
செய்யசங் கீன்ற செழுமுத்தால் மெய்யதுவும்
மன்பொரு வேல்மாறன் வார்பொதியிற் சந்தனமால்
என்பெறா வாடும் என்தோள். 67

இப்பியீன்று இட்ட எறிகதிர் நித்திலம்
கொற்கையே யல்ல படுவது-கொற்கைக்
குருதிவேல் மாறன் குளிர்சாந் தகலம்
கருதியார்கண்ணும் படும். 68

கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்தார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித்-தொடியுலக்கை
கைம்மனையில் ஓச்சப் பெறுவெனோ? யானும் ஓர்
அம்மனைக் காவல் உளேன். 69

என்னை உரையல் என் பேருரையல் ஊருரையல்
அன்னையும் இன்னள் எனவுரையல் பின்னையுந்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
கண்படாவாறே யுரை. 70

மாறடுபோர் மன்னர் மதிக்குடையும் செங்கோலும்

கூறிடுவாய் நீயோ குளிர்வாடாய்! சோறடுவார்
ஆரத்தால் தீமூட்டும் அம்பொதியிற் கோமாற்கென்
வாரத்தால் தோற்றேன் வளை. 71

துடியடித் தோற்செவி தூங்குகை நால்வாய்ப்
பிடியேயான் நின்னை யிரப்பல்-கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
சாலேகம் சார நாட. 72

எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅல் நெடுநல்வேல் மாறன்-உலாஅங்கால்
பைய நடக்கவுந் தேற்றாயால் நின்பெண்மை
ஐயப் படுவ துடைத்து. 73

போரகத்துப் பாயுமா பாயாது பாயமா
ஊரகத்து மெல்ல நடவாயோ-கூர்வேல்
மதிவெங் களியானை மாறன் தன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ. 74

ஆடுகோ சூடுகோ ஐதாக் கலந்துகொண்டு
ஏடுகோ டாக எழுதுகோ-நீடு
புனவட்டப் பூந்தெரியல் பொற்றேர் வழுதி
கனவட்டங் கால்குடைந்த நீறு. 75

பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாட்போல
அணியிழை அஞ்ச வருமால்-மணியானை
மாறன் வழுதி மணவா மருள்மாலைச்
சீறியோர் வாடை சினந்து. 76

வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்த்தனபோல்
ஏரிய ஆயினும் என்செய்யும்-கூரிய
கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை. 77

நாணாக்காற் பெண்மை நலன் அழியும் முன்னின்று
காணாக்காற் கைவளையுஞ் சோருமால்-காணேன் நான்
வண்டு எவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டு எவ்வந் தீர்வதோர் ஆறு. 78

மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன்-கண்டக்காற்
பூணாகந் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோ டுடன்பிறந்த நான். 79

செய்யார் எனினுந் தமர்செய்வ ரென்னுஞ்சொல்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்!-கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு. 80

உகுவாய் நிலத்த துயர்மணல்மேல் ஏறி
நகுவாய்முத் தீன்றசைந்த சங்கம்-புகுவான்
திரைவரவு பார்த்திருக்குந் தென்கொற்கைக் கோமான்
உரைவரவு பார்த்திருக்கும் நெஞ்சு. 81

கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவனேல் கூடு என்று-கூடல்
இழைப்பாள்போற் காட்டி இழையா திருக்கும்
பிழைப்பில் பிழைபாக் கறிந்து. 82

குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி-புறப்படின்
ஆபுகு மாலை அணிமலையில் தீயேபோல்
நாடறி கெளவை தரும். 83

ஏற்பக் குடைந்தாடில் ஏசுவர் அல்லாக்கால்
மாற்றி யிருந்தாள் எனவுரைப்பர்-வேற்கண்ணாய்!

கொல்யானை மாறன் குளிர்புனல் வையைநீர்
எல்லாம் எனக்கோர் இடர். 84

யான் ஊடத் தான் உணர்த்த யான் உணரா விட்டதற்பின்
தான் ஊட யானுணர்த்தத் தான் உணரான்-தேன் ஊறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகலம்
எய்தா திராக்கழிந்த வாறு. 85

புல்லாதார் வல்லே புலர்கென்பர் புல்லினார்
நில்லா யிரவே நெடிதென்பர்-நல்ல
விராமலர்த் தார்மாறன் வெண்சாந் தகலம்
இராவளிப் பட்ட திது. 86

பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்நூல்
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்-சாரல்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேல்
தலைபடுப தார்வேந்தர் மார்பு. 87

நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்தர் இளங்கமுகின் பாளையும்-சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றும் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையான் நாடு. 88

மைந்தரோ டூடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும ஈஞ்சாந்தின் சோறுழக்கி-எங்கும்
தடுமாறல் ஆகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூடல் அகம். 89

மடங்கா மயில்ஊர்தி மைந்தனை நாளும்
கடம்பம்பூக் கொண்டேத்தி அற்றால்-தொடங்கமருள்
நின்றிலங்கு வென்றி நிரைகதிர்வேல் மாறனை
இன் தமிழால் யாம்பாடும் பாட்டு. 90

செங்கண் நெடியான்மேல் தேர்விசையன் ஏற்றியபூப்
பைங்கண்வெள் ஏற்றான்பால் கண்டற்றால்-எங்கும்
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும். 91

கூந்தல்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்கிய ஞான்றுண்டால்-யாங்கொளித்தாய்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு. 92

கண்ணர் கதவந் திறமின் களிறொடுதேர்
பண்ணார் நடைப் புரவி பண்விடுமின்-நண்ணாதீர்
தேர்வேந்தன் தென்னன் திருவுத் திராடநாள்
போர்வேந்தன் பூசல் இலன். 93

நிறைமதிபோல் யானைமேல் நீலத்தார் மாறன்
குடைதோன்ற ஞாலத் தரசர்-திறைகொள்
இறையோ எனவந் திடம்பெறுதல் இன்றி
முறையோ என நின்றார் மொய்த்து. 94

நிரைகதிர்வேல் மாறனை நேர்நின்றார் யானைப்
புரைசை யறநிமிர்ந்து பொங்கா-அரசர்தம்
முன்முன்னா வீழ்ந்தார் முடிகள் உதைத்தமாப்
பொன்னுரைகல் போன்ற குளம்பு. 95

அருமணி ஐந்தலை யாடரவம் வானத்து
உருமேற்றை அஞ்சி ஒளிக்கும்-செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல் கனவுமே
அங்கண்மா ஞாலத் தரசு. 96

நேமி நிமிர்தோள் நிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவலன் ஆணையால்
ஏம மணிப்பூண் இமையார் திருந்தடி

பூமி மிதியாப் பொருள். 97

செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாறன்
உருமின் இடிமுரசு ஆர்ப்ப-அரவுறழ்ந்து
ஆமா உகளும் அணிவரையின் அப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து. 98

மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத் - திருத்தக்க
வையக மெல்லாம் எமதென் றெழுதுமே
மொய்யிலைவேல் மாறன் களிறு. 99

உருவத்தார்த் தென்னவன் ஓங்குஎழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழில் வேறால்தேரில்-ஒருகோடு
வேற்றார் அகலம் உழுமே யொருகோடு
மாற்றார் மதில்திறக்கு மால். 100

தோற்றம் மலைகடல் ஓசை புயல்கடாஅம்
காற்றின் நிமிர்ந்த செலவிற்றாய்க்-கூற்றும்
குறியெதிர்ப்பைக் கொள்ளும் தகைமைத்தே யெங்கோன்
எறிகதிர்வேல் மாறன் களிறு. 101

அடுமதில் பாய அழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகதழில் நாணி-முடியுடை
மன்னர் குடரால் மறைக்குமே செங்கனல்வேல்
தென்னவர் கோமான் களிறு. 102

வெருவரு வெஞ்சமத்து வேலிலங்க வீழ்ந்தார்
புருவ முரிவுகண் டஞ்சி-நரிவெரீ இச்
சேட்கணித்தாய் நின்றழைக்குஞ் செம்மற்றே தென்னவன்
வாட்கணித்தாய் வீழ்ந்தார் களம். 103

ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்

தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி-யானையும்
புல்லார் பிடிபுலம்பத் தன்கண் புதைத்தே
பல்யானை அட்ட களத்து. 104

வாகை வனமாலை சூடி அரசுறையும்
ஓகை உயர்மாடத் துள்ளிருந்து-கூகை
படுபேய்க்குப் பாட்டயரும் பண்பிற்றே தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு. 105

பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்
திறைமுறையின் உய்யாதார் தேயம்-முறைமுறையின்
ஆன்போய் அரிவையர் போய் ஆடவர்போய் ஆய் ஈன்ற
ஈன்பேய் உறையும் இடம். 106

கொடித்தலைத்தார்த் தென்னவன் தோற்றான்போல் நின்றான்
மடித்தவாய் சுட்டிய கையாற்-பிடித்தவேற்
கண்நேரா ஓச்சிக் களிறணையாக் கண்படுத்த
மண்ணேரா மன்னரைக் கண்டு. 107

தொழில்தோற்றாப் பாலகனை முன்னிறீஇப் பின்னின்று
அழலிலைவேல் காய்த்தினார் பெண்டிர்-கழலடைந்து
மண்ணிரத்த லென்ப வயங்குதார் மாமாறன்
கண்ணிரத்தந் தீர்க்கு மருந்து. 108

இருங்களி றொன்று மடப்பிடி சாரல்
இலங்கருவி நீராற் றெளிக்கும் - நலங்கிளர்வேல்
துன்னரும் போர்க்கோதை தொடாஅன்செருக்கின்
மன்னன் மதிலாய வென்று. 109

# தமிழ்விடு தூது

தமிழ்விடு தூது என்ற நூல், மதுரையில் எழுந்தருளி உள்ள சோமசுந்தரக் கடவுளிடம் ஒரு பெண் தன் காதல் துன்பத்தைக் கூறித் தமிழ்மொழியைத் தூது அனுப்பியதாக அமைந்துள்ளது.

இந்த நூலில் தூது பெறுவோர் கடவுள். அதாவது சோமசுந்தரக் கடவுள். தூது விடுவோர் ஒரு பெண். தூது செல்லும் பொருள் தமிழ்மொழி. இந்த நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. இந்த நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர் தெரியவில்லை.

## நூல் கூறும் பொருள்கள்

- ✓ தூது செல்லும் தமிழ் மொழியின் பெருமைகளைக் கூறுதல்.
- ✓ பிற பொருட்களைத் தூதாக அனுப்பாமைக்குரிய காரணங்களைத் தலைவி தூதுப் பொருளிடம் கூறுதல்.
- ✓ தூது பெறும் தலைவன் ஆகிய சோமசுந்தரக் கடவுளைப் புகழ்ந்து கூறுதல்.
- ✓ தலைவி தன் துன்பம் கூறுதல்
- ✓ தலைவி தமிழிடம் தன் தூதுச் செய்தியைக் கூறித் தூது வேண்டுதல்.

என்ற பகுதிகளைக் கொண்டு திகழ்கின்றது தமிழ்விடுதூது.

## இடம் பெறும் செய்திகள்

இனி, மேற்கண்ட செய்திகள் தமிழ்விடு தூதில் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதைக் காண்போம்.

## தமிழ்மொழியின் பெருமை

தூது அனுப்புவோர் தூதுப்பொருளிடம் அதன் பெருமைகளைக் கூறித் தூது செல்ல வேண்டுவதை, எல்லாத் தூது நூல்களிலும் காணலாம். இந்த நூலில் தூது விடும் தலைவி, தூதுப் பொருளான தமிழின் பல்வேறு பெருமைகளைப் புகழ்ந்து கூறுகின்றாள்.

## தமிழைப் புகழக் காரணம்

சிவபெருமான், தடாதகைப் பிராட்டியார், விநாயகர், முருகன், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், அகத்தியர், தொல்காப்பியர், மெய்கண்ட தேவர்,

திருவிசைப்பாப்பாக்கள் பாடிய திருமாளிகைத் தேவர் முதலியவர்கள், திருமூலர், கபிலர், பரணர், நக்கீரர், ஐயடிகள் காடவர்கோன், கழறிற்றறிவார், திருவள்ளுவ நாயனார் முதலாகிய கல்வி, கேள்விகளில் சிறந்த எல்லாருமாய் நீ இருக்கின்றாய். ஆகவே, உன்னைக் கண்டு, உன் பொன் போன்ற அடிகளைப் புகல் இடமாகக் கொண்டு போற்றுகின்றேன் என்று, தலைவி முதலில் தமிழ்மொழியைப் போற்றக் காரணம் கூறுகின்றாள்.

கல்லாதார் சிங்கம்எனக் கல்விகேள்விக்கு உரியர்
எல்லாரும் நீயாய் இருந்தமையால் - சொல்ஆரும்
என்அடிக ளேஉனைக்கண்டு ஏத்தின்இடர் தீரும்என்று
பொன்அடிக ளேபுகலாப் போற்றினேன்
(கண்ணிகள், 15-16)

(ஏத்தின் = புகழ்ந்தால்; இடர் = துன்பம்; புகலா = அடைக்கலமாக) என்கிறாள்.

## தமிழை அரசனாக உருவகம் செய்தல்

''பாவே ! நூலே ! கலையே ! புலவர்களுடைய உள்ளம் கருகாது சொல் விளையும் செய்யுளே ! வெண்பா முதலாக மருட்பா இறுதியாக உள்ள 5 குலங்களாய் நீ வந்தாய் ! கொப்பூழில் உதான வாயு தரித்து; வாக்கு ஆகிய கருப்பத்தை அடைந்து; தலை, கழுத்து, நெஞ்சு ஆகிய இடங்களைச் சார்ந்து; நாக்கு, பல், மேல் வாய் ஆகியவற்றில் உருவாகி; முதல் எழுத்துகள் முப்பதும், சார்பெழுத்துகள் இருநூற்று நாற்பதுமாய்ப் பிறந்தாய்” என்கிறாள் தலைவி. இப்பகுதியில் தமிழ் எழுத்துகளின் பிறப்பு முறை கூறப்படுகின்றது.

எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, இடைநிலை, ஈற்றுநிலை, போலி, பதம், புணர்ச்சி என்ற 12 பருவங்களை உடையதாய் வளர்ந்தாய்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பாலும் ஊட்ட நீ நன்கு வளர்ந்தாய்.
பிள்ளைத் தமிழ் நூலுக்குரிய பத்துப் பருவங்களாக வளர்ந்தாய்.

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய செய்யுள் ஈட்டச்சொற்கள் நான்கும்; பெயர், வினை, இடை, உரி ஆகிய செந்தமிழ்ச் சொற்கள் நான்கும்; அகத்திணைகள் ஏழும்; புறத்திணைகள் ஏழும்; எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினம் என்ற எட்டும்; அணிகள் முப்பத்தைந்தும் கொண்ட மிக்க அழகுடைய மாப்பிள்ளையாய் உள்ளாய்.

செப்பல் பண், அகவல் பண், துள்ளல் பண், தூங்கல் பண் ஆகிய பண்கள் பட்டத்துப் பெண்களாக உள்ளனர்.

ஐந்து வகை இசைக் கருவிகள் வெளியிடும் 103 பண்கள் பின்னர் மணந்த பாவையராக உள்ளனர்.

வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரம் ஆகிய ஒன்பது சுவைகள் ஆகிய குழந்தைகளைப் பெற்றாய்.

நாடகமாகிய மனைவியுடன் கொலுவில் வீற்றிருக்கின்றாய் எனத் தமிழ்மொழியின் சிறப்புகள் கூறப்படுகின்றன.

பெரும் காப்பிய இலக்கியத்திற்குரிய 18 வருணனைகள் ஆகிய வாழ்வு எல்லாம் கண்டு மகிழ்ந்தாய்.

வையை ஆற்றில் பெருகி வந்த நீரைத் தடுக்க மண் சுமந்த சிவபெருமானைப் பாண்டிய மன்னன் அடித்த பிரம்பை உன் செங்கோல் ஆகக் கொண்டாய்.

திசைச் சொற்கள் ஆகிய தமிழ் நீங்கிய 17 மொழிகளும் உன் சிற்றரசர்கள் ஆவர்.

உன் நாட்டின் எல்லை ஆக மேல் கடல், கீழ்க்கடல், குமரி ஆறு, திருவேங்கடம் ஆகியவற்றைக் கொண்டாய்.

வையை ஆற்றின் வடக்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும், மருத ஆற்றின் தெற்கும் ஆகிய நாட்டை உன் அரண்மனையாகக் கொண்டாய்.

மூன்று வேந்தர்கள் ஆகிய சேரன், சோழன், பாண்டியன் ஆகியவர்களின் வாகனமாக நீ நில உலகம், தேவர் உலகம், பாதாள உலகம் ஆகியவற்றிற்குச் சென்றாய்.

வேதங்கள், ஆகமங்கள் ஆகியன உன் புரோகிதர்கள். பெரும் காப்பியங்கள், நாடக நூல்கள் ஆகியவை உன் நண்பர்கள். சாத்திரங்கள் ஆகிய சமய நூல்கள் உன் நாட்டைப் பாதுகாக்கும் படைத்தலைவர்கள். மகாபாரதம், பதினெட்டுப் புராணங்கள் ஆகியன உன் படைகள்.

## சொல் அணிகள் உன் அங்கங்கள்

தேவார மூவர் பாடிய பதிகங்களும், வாதவூரர் அருளிய திருவாசகமும் அவர் கூறத் தில்லையம்பலவன் எழுதிய திருக்கோவையாரும், ஐந்து பெரும் காப்பியங்களும், திருவாரூர் மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, திருவாமாத்தூர்க் கலம்பகம், கலிங்கத்துப் பரணி, பொன்வண்ணத்தந்தாதி, இராசராச சோழன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் ஆகியன உன் மெய்க்காப்பாளர்கள். இவ்வாறு தமிழ்மொழியை மன்னனாக உருவகம் செய்து பல சிறப்புக்களையும் கூறக் காணலாம்.

## தமிழைக் கனியாக உருவகம் செய்தல்

வெண்பா முதலிய நான்கு வகைப் பாக்களும் வயல்களின் வரப்புகள். பாவினங்கள் மடை. நல்ல வனப்பாகிய காளைகளால் மனம், புத்தி, அகங்காரம், அந்தக்கரணம் என்ற ஏரைப் பூட்டி, நல்ல நான்கு நெறிகளை விதையாக விதைத்து, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகைப் பொருள்களை விளைவிக்கும் நாளில், புன்கவிகளாகிய களைகளை, அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரர், ஒட்டக்கூத்தர் ஆகியோர் களைகின்றனர். இதனால், பெருங்கனியாகத் திகழும் தமிழே என்று தமிழ்மொழியைக் கனியாக உருவகித்துப் போற்றுகிறாள்.

## சிறப்புக்கள்

சிந்தாமணியாய் உள்ள உன்னைச் சிந்து என்று கூறிய நாக்கு சிந்தும். (சிந்தாமணி = ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. சிந்து = சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.) உலகில் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்ற 5 நிறங்கள் உண்டு. ஆனால் உனக்கு நூறு (பா) வண்ணங்கள் உண்டு. கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்ற ஆறுவகைச் சுவைகள் (ரசம்) உண்டு. ஆனால் உனக்கு வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரம் என்ற 9 வகைச் சுவைகள் உண்டு.

அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பால்களுடன் ஆண்பால், பெண்பால் என்ற இரண்டு பால்களும் சேர்ந்து உனக்கு ஐந்து பால்கள் உண்டு என்று புகழ்கின்றாள்.

# மதுரைச் சொக்கநாதர் தமிழ் விடு தூது

## (கலிவெண்பா)

சீர்கொண்ட கூடல் சிவராச தானி புரந்து
ஏர் கொண்ட சங்கத்துஇருந்தோரும் - போர்கொண்டு 1

இசையும் தமிழரசி என்று ஏத்தெடுப்பத் திக்கு
விசையம் செலுத்திய மின்னும் - நசையுறவே 2

செய்ய சிவஞானத் திரள் ஏட்டில் ஓரேடு
கையில் எடுத்த கணபதியும் - மெய்யருளால் 3

கூடல் புரந்து ஒருகால் கூடற் புலவர்எதிர்
பாடல் அறிவித்த படைவேளும் - வீடு அகலா 4

மன்னும் மூவாண்டில் வடகலையும் தென்கலையும்
அன்னை முலைப்பாலில் அறிந்தோரும் - முன்னரே 5

மூன்று விழியார் முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்
ஈன்றுதரச் சொல்லின் இசைந்தோரும் - தோன்று அயன் மால் 6

தேடி முடியா அடியைத் தேடாதே நல்லூரில்
பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி 7

மட்டோ லைப் பூவனையார் வார்ந்துஓலை சேர்த்துஎழுதிப்
பட்டோ லை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே 8

ஒல்காப் பெருந்தமிழ் மூன்று ஓதியருள் மாமுனியும்
தொல்காப்பியம் மொழிந்த தொல்முனியும் - மல்காச் சொல் 9

பாத்திரம் கொண்டே பதிபால் பாய் பசுவைப் பன்னிரண்டு
சூத்திரம் கொண்டே பிணித்த தூயோரும் - நேத்திரமாம் 10

தீதில் கவிதைத் திருமாளிகைத் தேவர்
ஆதி முனிவர் அனைவோரும் - சாதி, உறும் 11

தந்திரத்தினால் ஒழியாச் சார்வினையைச் சாற்றுதிரு
மந்திரத்தினால் ஒழித்த வல்லோரும் - செந்தமிழில் 12

பொய்யடிமை இல்லாப் புலவர் என்று நாவலர்சொல்
மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள் 13

காடவரும் செஞ் சொல் கழறிற்றறிவாரும்
பாடஅரும் தெய்வமொழிப் பாவலரும் - நாடஅரும் 14

கல்லாதார் சிங்கமெனக் கல்வி கேள்விக்கு உரியர்
எல்லாரும் நீயாய் இருந்தமையால் - சொல் ஆரும் 15

என்னடிகளே உனைக்கண்டு ஏத்தின்இடர் தீருமென்றுஉன்
பொன்னடிகளே புகலாப் போற்றினேன் - பன்னியமென் 16

பஞ்சி படா நூலே பலர்நெருடாப் பாவே கீண்டு
எஞ்சி அழுக்கு ஏறா இயல்கலையே - விஞ்சுநிறம் 17

தோயாத செந்தமிழே சொல்ஏர் உழவர் அகம்
தீயாது சொல்விளையும் செய்யுளே - வீயாது 18

ஒருகுலத்தும் வாராது உயிர்க்கு உயிராய் நின்றாய்
வருகுலம் ஓர் ஐந்தாயும் வந்தாய் - இருநிலத்துப் 19

புண்ணியம் சேர்உந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காம் கருப்பமாய் - நண்ணித் 20

தலைமிடறு மூக்குரத்தில் சார்ந்து இதழ்நாத் தந்தம்
உலைவிலா அண்ணத்து உருவாய்த் - தலைதிரும்பி 21

ஏற்பமுதல் முப்பது எழுத்தாய்ச் சார்பு இருநூற்று

நாற்பது எழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே 22

எண்முதலாகப் பகரும் ஈராறு எனும்பருவம்
மண்முதலோர் செய்துவளர்க்கும் நாள் - கண்மணிபோல் 23

பள்ளிக்கூ டத்து அசையாம் பற்பல தொட்டில் கிடத்தித்
தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி - உள் இலகு 24

மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய் - மஞ்சரையே 25

பன்னிஒரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்
உன்னை வளர்த்துவிட ஒண்ணுமோ - முன்னே 26

நினையும் படிப்பெல்லாம் நின்னைப் படிப்பார்
உனையும் படிப்பிப்பார் உண்டோ - புனைதருநல் 27

செய்யுள்சொல் நான்கும்உயர் செந்தமிழ்ச்சொல் ஓர்நான்கும்
மெய்உட்பொருள் ஏழ்விதத் திணையும் - மையில் எழுத்து 28

ஆதியாப்பு எட்டும் அலங்காரம் ஏழ்ஐந்தும்
பேதியாப் பேரெழில் மாப்பிள்ளையாய்ச் - சாதியிலே 29

ஆங்குஅமை செப்பல்பண் அகவல்பண் துள்ளல்பண்
தூங்கல்பண் பட்டத்துத் தோகையரா - ஓங்குமனத்து 30

எண் கருவி ஐந்துஈன்றிடு நூற்று மூன்றான
பண்களும்பின் கல்யாணப் பாவையரா - எண்கொளும் 31

நல்தாரகமா நவரசமாம் பிள்ளைகளைப்
பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே - உற்று அகலாப் 32

பண்கள்முதல் பெண்களொடும் பாலரொடும் நாடகமாம்
பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே - மண்புகழத் 33

தாழ்விலா அட்டாதச வன்னனைகள் எனும்

வாழ்வுஎலாம் கண்டு மகிழ்ந்தாயே - ஆழ 34

நெடுங்கோல வையையில் என் நேசர்மேல் பட்ட

கொடுங்கோல் செங்கோலாகக் கொண்டாய் - அடங்காத 35

எம்கோவே பத்தென்று இயம் பு திசைக்குள்ளே நின்

செங்கோல் செலாத திசையுண்டோ - இங்கே உன் 36

தேசம் ஐம்பத்தாறில் திசைச்சொல் பதினேழும்

மாசற நீ வைத்த குறுமன்னியரோ - வீசு 37

குடகடலும் கீழ்கடலும் கோக் குமரியாறும்

வடவரையும் எல்லை வகுத்தாய் - இடைஇருந்த 38

முன்உறும் தென்பாண்டி முதல் புனல்நாடு ஈறான

பன்னிரண்டு நாடும் அப்பால் நாடோ - அந்நாட்டுள் 39

வையை கருவை மருதாறு மருவூர் நடுவே

ஐய! நீ வாழும் அரண்மனையோ - செய்யபுகழ் 40

மூ வேந்தர் வாகனமா மூவுலகும் போய் வளைந்த

பாவேந்தே நீ பெரிய பார்வேந்தோ - கா ஏந்து 41

விண்ணவரும் காணரிய வேத ஆகமங்கள் எலாம்

புண்ணியனே உன்றன் புரோகிதரோ - எண்ணரிய 42

நல்ல பெருங்காப்பியங்கள் நாடகம் அலங்காரம்

சொல்லரசே உன்னுடைய தோழரோ - தொல் உலகில் 43

சார்புரக்கும் கோவே நல்சாத்திரங்கள் எல்லாம் உன்

பார் புரக்கும் சேனாபதிகளோ - வீரர் அதிர் 44

போர்ப் பாரதமும் புராணம் பதினெட்டும்

சீர்ப்பாவே உன்னுடைய சேனைகளோ - பார்ப்பார்கள் 45

அக்கரவர்த்தி எனலாம் என்பார் பூலோக

சக்கரவர்த்தியும் நீதான் அன்றோ - சக்கரம்முன்பு 46

ஏந்தி நெடுந் தேர்மேல் ஏறிச் சுழிகுளம்

நீந்திஓர் கூடநிறை சதுக்கம் - போந்து 47

மதுரம் கமழ் மாலைமாற்று அணிந்து சூழும்

சதுரங்க சேனை தயங்கச் - சதுராய் 48

முரசம் கறங்க முடிவேந்தர் சூழ

வர சங்கம் மீதிருந்து வாழ்ந்தே - அருள் வடிவாய் 49

ஓங்குபுகழ் மூவர் ஒருபஒருபஃதும்

ஆங்கு அவை சொல் வாதவூராளி சொல்லும் - ஓங்கும் அவன் 50

கூற்றாய் அரன் எழுதும் கோவையும் கோதில்தாய்

மாற்றா இரட்டைமணி மாலையும் - தேற்றம்உற 51

பற்றாம் இலக்கண நூற்பாவும் நூற்பா அறிந்து

கற்றார் வழங்கு பஞ்சகாப்பியமும் - கொற்றவருக்கு 52

எண்ணிய வன்னனைகள் ஈரொன்பதும் அறியக்

கண்ணியம் மிக்க பெருங்காப்பியமும் - நன்னியே 53

இன்புறு சேரந் அரங்கேற்ற மகிழ்ந்து அம்பலத்தான்

அன்புறு பொன்வண்ணத்து அந்தாதியும் - முன்பு அவர்சொல் 54

மாத்தமிழாம் மும்மணி மாலையும் பட்டினத்தார்

கோத்தணிந்த மும்மணிக் கோவையும் - மூத்தோர்கள் 55

பாடியருள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்

கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும் - ஆடக மா 56

வெற்புஅனையார் மாதை விமலரிடத்தே இருவர்
கற்பனையால் சொன்ன கலம்பகமும் - முற்படையோடு 57

ஆடல் கலிங்கம் அழித்து ஆயிரம் ஆனைகொன்ற
பாடற்கு அரிய பரணியும் - கூடல் 58

நராதிபன் கூத்தன்எதிர் நண்ணி ஓர்கண்ணிக்கு
ஓராயிரம்பொன் ஈந்த உலாவும் - பராவும் அவன் 59

பிள்ளைத் தமிழும் முன்னாம் பேராத பல்குரவர்
வெள்ளத்தினும் மிகுத்தோர் மெய்காப்ப - உள்ளத்து 60

வீரியம் செய்து வினையொழியவே ராச
காரியம் செய்யும் கவிதையே - பாரில் 61

அரியாசனம் உனக்கே ஆனால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே - விரிஆவுர் 62

திகழ்பா ஒருநான்கும் செய்யுள் வரம்பாகப்
புகழ் பாவினங்கள் மடைப்போக்கா - நிகழவே 63

நல்ஏரினால் செய்யுள் நால்கரணத்து ஏர்பூட்டிச்
சொல்லேர் உழவர் தொகுத்து ஈண்டி - நல்லநெறி 64

நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச் செய்விக்கும் நாள் - மேலோரில் 65

பாத்தனதாகக் கொண்ட பிள்ளைப்பாண்டியன் வில்லி ஒட்டக்
கூத்தன் இவர் கல்லாது கோட்டி கொளும் - சீத்தையரைக் 66

குட்டிச் செவிஅறுத்துக் கூட்டித் தலைகள் எல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த் தூர் - கட்டி 67

வளர்ந்தனை பால் முந்திரிகை வாழைக் கனியாய்க்

கிளர்ந்த கரும்பாய் நாளிகேரத்து - இளங்கனியாய் 68

தித்திக்கும் தென்அமுதாய்த் தெள்ளமுதின் மேலான

முத்திக் கனியே என் முத்தமிழே - புத்திக்குள் 69

உண்ணப்படும் தேனே உன்னோடு உவந்து உரைக்கும்

விண்ணப்பம் உண்டு விளம்பக் கேள் - மண்ணில் 70

குறம்என்று பள்என்று கொள்வார் கொடுப்பாய்க்கு

உறவுஎன்று மூன்று இனத்தும் உண்டோ ! திறம்எல்லாம் 71

வந்துஎன்றும் சிந்தாமணியா இருந்த உனைச்

சிந்துஎன்று சொல்லிய நாச் சிந்துமே - அந்தரம்மேல் 72

முற்றும் உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ

குற்றம் இலாப் பத்துக்குணம் பெற்றாய் - மற்றொருவர் 73

ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோ நீ

நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய் - நாக் குலவும் 74

ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள் உணவு

ஆன நவரசம் உண்டாயினாய் - ஏனோர்க்கு 75

அழியா வனப்பு ஒன்றுஅலது அதிகம் உண்டோ

ஒழியா வனப்பு எட்டு உடையாய் - மொழிவேந்தர் 76

வாங்கு பொருள்கோள் வகை மூன்றே பெற்றார்நீ

ஓங்கு பொருள்கோள் வகை எட்டு உள்ளாயே - பாங்குபெற 77

ஓர் முப்பால் அன்றி ஐம்பால் உள்ளாய் உனைப்போலச்

சீர் முப்பதும் படைத்த செல்வர் ஆர் - சேரமான் 78

தன்னடிக் கண்டு தளை விடுத்தாய் ஏழ்தளை உன்

பொன்னடிக்கு உண்டு என்பது என்ன புத்தியோ - என் அரசே 79

திண் பாவலர்க்கு அறிவாம் செந்தமிழாய் நின்றஉன்னை

வெண்பா என்று ஓதுவது மெய்தானோ - பண்பு ஏர் 80

ஒலிப்பாவே சங்கத்து உகம் மூன்று இருந்தாய்

கலிப்பா என்று ஓதல் கணக்கோ - உலப்பு இல் 81

இருட்பா மருள் மாற்றி ஈடேற்றும் உன்னை

மருட்பா என்று ஓதல் வழக்கோ - தெருள்பாப் 82

பொருத்தம் ஒருபத்துப் பொருந்தும் உனைத்தானே

விருத்தம் என்று சொல்லல் விதியோ - இருள்குவையை 83

முந்தி ஒளியால் விலக்கும் முச்சுடர் என்பார் உனைப்போல்

வந்து என் மனத்து இருளை மாற்றுமோ - சிந்தா 84

மணி கொடையின் மிக்கது என்பார் வண்கொடையும் உன்பேர்

அணியும் பெருமையினால் அன்றோ - தணியும் 85

துலங்கு ஆரம் கண்டசரம் தோள்வளை மற்றுஎல்லாம்

அலங்காரமே உனைப்போல் ஆமோ - புலம்காணும் 86

உன்னைப் பொருள்என்று உரைக்கும் தொறும் வளர்வாய்

பொன்னைப் பொருள் என்னப் போதுமோ - கன்னமிட்டு 87

மன்னர் கவர்ந்தும் வளர்பொருளே கைப்பொருள்கள்

என்ன பொருள் உனைப்போல் எய்தாவே - நன்னெறியின் 88

மண்ணில் புகழ்உருவாய் வாழ்வதற்கும் வாழுநர்

விண்ணில் போய்த் தேவுருவாய் மேவுதற்கும் - எண்ணிஉனைக் 89

கொண்டு புகழ் கொண்டவர்க்கே கூடும் உனைக்கூடாத

தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால் - தண்தமிழே 90

ஈங்கு உனது சங்கத்தால் ஈசர் உயர்ந்தாரோ

ஓங்கும் அவரால் நீ உயர்ந்தாயோ - பூங்கமல 91

வீடுஆளும் வாணி அங்கை மேலே இருந்தாயோ

ஏடா உன்மேல் இருந்தாளோ - ஆடு அரவத் 92

தாழ் பாயலாளரை நீ தானே தொடர்ந்தாயோ

சூழ் பாயோடு உன்னைத் தொடர்ந்தாரோ - வாழ்வே என்று 93

ஓதி முனிகேட்க உனை முருகர் சொன்னாரோ

சோதி யவரை நீ சொற்றனையோ - பேதியா 94

நேசர் உனக்கே பொருளாய் நின்றாரோ - நீள்மதுரை

வாசருக்கு நீ பொருளாய் வந்தாயோ - பாசமுறும் 95

என்செய்தி நீ கண்டு இரங்குவது நீதி அல்லால்

உன் செய்தி நானோ உரை செய்வேன் - இன்சொல்லாய் 96

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக என்ற - சொற்குள்ளே 97

எல்லார்க்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற

வல்லாய் உனக்கு உரைக்க வல்லேனோ - சொல்லியஉன் 98

ஈரடிக்குள்ளே உலகமெல்லாம் அடங்கும் எனின்

நேரடிக்கு வேறே நிலன்உண்டோ - ஓரடிக்கு ஓர் 99

ஆயிரம் பொன் இறைக்கும் இயரை வீதியிலே

போய் இரந்து தூது சொல்லப் போக்கினோய் - ஆயிருந்தும் 100

மாண்பாய் ஓர் தூது சொல்லி வா என்பேன் என்வருத்தம்

காண்பாய் என் பெண்மதி நீகாணாதே - ஆண்பனைநல் 101

பெண்பனை ஆக்கினையால் பெண்களிலே காரைக்கால்

வண்பதியார் ஔவைஎன வந்து உதித்தாய் - நண்புஆர் 102

திலகவதியா ருடனே சென்மித்தாய் மாடக்

குல தவ தியானத்தார் கூடல் - பல தவம் சேர் 103

மேனியார் கண்டிகையும் வெண்ணீறும் கண்டு உருகும்

மானியார் தேசிகனா வந்துஉதித்தாய் - ஞானியார் 104

துங்க மகவாகத் தோன்றி வனப்பகைக்கும்

சிங்கடிக்கும் தாதையாய்ச் சீர் செய்தாய் - இங்குநீ 105

பெண்கள்எல்லாம் வாழப் பிறந்தமையால் என்மனத்தில்

புண்கள் எல்லாம் ஆறப் புரிகண்டாய் - ஒண்கமலத்து 106

அன்னம்தனை விடுப்பேன் அன்னந்தான் அங்குஅவரை

இன்னம்தான் கண்டு அறியாது என்பரே - மன்எந்தாய் 107

அப்பால் ஓர் வண்டை அனுப்பின் அவர் காமம்

செப்பாதே என்றால் திகைக்குமே - தப்பாது 108

மானைப் போய்த் தூது சொல்லி வா என்பேன் வல்லியப் பூந்

தானைப் பரமர்பால் சாராதே - ஏனைப்பூங் 109

கோகிலத்தை நான் விடுப்பேன் கோகிலமும் காக்கையினம்

ஆகி வலியானுக்கு அஞ்சுமே - ஆகையினால் 110

இந்த மனத்தைத் தூதாய் ஏகுஎன்பேன் இம்மனமும்

அந்த மனோதீதர்பால் அண்டாதே - எந்தவிதம் 111

என்றுஎன்று இரங்கினேன் என் கவலை எல்லாம்பொன்

குன்று அனையாய் உன்னுடனே கூறுகேன் - சென்றாலும்! 112

பண்ணிய பத்தொன்பதின் ஆயிரத்து இருநூற்று

எண்ணிய தொண்ணூற்று ஒன்றெனும் தொடையாய் - நண்நீ 113

ஒருதொடை வாங்கி உதவாயோ ஓர்சே

விருது உடையார்க்கு நீ வேறோ - தருமிக்கே 114

ஓர் வாழ்க்கை வேண்டி உயர்கிழி கொள்வான்கொங்கு

தேர் வாழ்க்கை என்று எடுத்த செய்தியும் - கீரன் 115

இசையா வகையின் இயம்பினான் என்றே

வசையாடித் தர்க்கித்த வாக்கும் - இசையான 116

பாட்டுக்கு இரங்கி ஒருபாணனுக்குச் சேரலன்மேல்

சீட்டுக்கவி விடுத்த சீராட்டும் - பாட்டியலில் 117

நாத்திரமா மேவுபொருள் நன்றா அறுபதெனும்

சூத்திரமாப் பாடியருள் தோற்றமும் - மாத்திரமோ 118

உன்னோடு அவர்விளையாட்டு ஒன்றோ வடமதுரைக்கு

அந்நேரம் உன்பிறகே யார் வந்தார் - மன்னவன் மேல் 119

காரியார் நாரியார் கண்ட கவியைப் பகிர

வாரிஇலாக் கானகத்தில் வந்தவர்ஆர் - நாரினொடும் 120

போற்றிஉறும் பத்திரற்காப் போந்து கிழஉருவில்

தோற்றி விறகு சுமந்தவர்ஆர் - தேற்றி அவற்கு 121

ஈயரிய பொற்பலகை இட்டவர்ஆர் மற்றுஅவன்தன்

நேய மனைவிக்கு எதிரா நேர்ந்தவளைப் - போய்அவையில் 122

தள்ளிஇசை தாபிக்கத் தக்கவர்ஆர் தென்மதுரைக்கு

உள்ளிருந்த சொக்கர் உனக்குள் அன்றோ - எள்ளி 123

வடமொழியில் வேத வசனமே ஈசர்

திட மொழியா என்பார் சிலரே - அடரும் 124

பரசமய கோளரியாய்ப் பாண்டி நாடுஎங்கும்

அரசமயம் நீ நிறுத்தும் அந்நாள் - விரசு நீ 125

ஆதிக்கண் வையையில் வேதாகமத்தைத் தாபித்தாய்

சோதிக்கிந் ஏடகமே சொல்லாதோ - வேதத்தேவு 126

ஆதவன் அங்கு அண்டாது அடைத்த கதவம் திறந்தாய்

வேதவனம் கண்டால் விளம்பாதோ - வேதம் 127

அமிழ்தினும் மிக்கென்னும் முனிக்கு அன்பர் உனைச் சொன்னார்

தமிழ்முனி என்னும் பேர் தாராதோ - தமிழால் 128

அறம் பொருள் இன்பம் வீடு ஆரணர் சொன்னார்அத்

திறம் பரமர் வாக்கே செப்பாதோ - மறந்திடல்இல் 129

கற்புஅலகை ஓதுமறை காணார் கீழ் நிற்கவும் நீ

பொன்பலகை மேலிருந்தாய் போதாதோ - தற்பரரேண்டு 130

எண்இரந்த வாசி அழைத்திட்டாய் சதுர்வேதப்

பண்நிறைந்த வாசி பகராதோ - அண்ணலார் 131

தென்பால் உகந்தாடும் செய்தி எல்லாம் உன்னிடத்தில்

அன்பால் என்று அப்பாலும் ஆரறியார் - உன்பேர் 132

பழிஆர் திசைச்சொல்லார் பன்னார் திருவாய்

மொழியார் குழறி மொழிவார் - அழியா 133

உருவால் அவாய் இருக்கும் ஓதரிய முத்தித்

திருவாலவாய் இருக்கும் செல்வர் - ஒரு மால் 134

வடமதுரை ஏறுமுன்னே வந்த வடிவு என்னத்

தடமதுரை மீன்உயர்த்த தாணு - படர்தீர்க்கும் 135

சத்திபுரத்து ஓர்பால் தழைத்து மகிழ்ந்தோர் சீவன்

முத்திபுரத்து ஓர்பால் முளைத்து எழுந்தோர் - அத்திசைபோல் 136

ஆங்குஓர் இருநான்கு அயிராவதம் சுமக்கும்

பூங்கோயிற்குள் உறைந்த புண்ணியனார் - பாங்காம் 137

இடம் பவனம் ஈது ஆக இந்திரன் வந்து ஏத்தும்

கடம்பவனம் மீதிலுறை காந்தர் - அடும்பேர் 138

அலகு அம்பு அரிக்கும் அரியார் முடிவேய்ந்து

உலகம் பரிக்கும் முறைஉள்ளார் - பலநாளும் 139

நின்றவூர்ப் பூசலார் நீடு இரவெலாம் நினைந்து

குன்று போலே சமைத்த கோயிலும் - நன்றிதரும் 140

தாயான கங்கைமுடி தான் குளிரக் கண்ணப்பர்

வாயால் உமிழ்ந்த திருமஞ்சனமும் - தூயமழைத் 141

துன்புஆர் திருக்குறிப்புத் தொண்டர் துணித்துறையில்

அன்பாய் அளித்த பரிவட்டமும் - இன்பாத் 142

தணிவுஅரிய மானக்கஞ்சாறணார் சாத்தும்

மணிமுடி சூழ் பஞ்சவடியும் - அணிவிடையார் 143

காமன்பால் முன்சேந்த கண்போல மூர்த்தியார்

தாம் அன்பால் முன்சேர்த்த சந்தனமும் - பூமன்போல் 144

காக்கும் அரிபுனைந்த கண்மலரும் காதலொடு

சாக்கியர் தாம்சாத்திய பூந்தண்மலரும் - போக்கியமா 145

ஆக்கிய மாறன் அமுதும் சிறுத்தொண்டர்

மார்க்கறியும் தாயர் தரு மாவடுவும் - நீக்கரிய 146

கார்ஆர் இரவில் கணம்புல்லர் தம்முடிமேல்
சீராக ஏற்றிய செந்தீபமும் - ஆரால் 147

அமைத்து வணங்கல் உறும் அங்கணர்க்குப் பூசை
சமைத்து வணங்கத் தகுமோ - உமைக்கு அன்பர் 148

அற்சனை பாட்டேயாம் என்று ஆரூரர்க்கு ஆதியிலே
சொற்றமிழ் பாடுகஎனச் சொன்னமையால் - சொற்படியே 149

செய்தாய் நால்வேதம் திகைத்து ஒதுங்கப் பித்தன்என்று
வைதாய் நீ வைதாலும் வாழ்த்தாமே - மெய்தான் 150

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன் - வருந்தினன் மால் 151

வெல்லானை தின்ற விளங்கனி ஆனேன் விரகக்
கல் ஆனை தின்ற கரும்பானேன் - நல் அவரைத் 152

தேடு நிழல் சிந்தனையின் தேம்பினேன் வெம்பனியால்
வாடிய செந்தாமரை ஒத்தேன் - ஓடம்மிசைக் 153

கொள்ளம்பூதூர் வெள்ளக் கொள்ளை கடந்தாய் என்மால்
வெள்ளம் கடத்திவிட வேண்டாவோ - தள்என்று 154

மாறுஇட்ட சாக்கியரை வன் கழுவேறச் செய்தாய்
சீறிட்ட வேளை அது செய்யாயோ? - நீறு இட்டே 155

அங்குஅரும் பின் கூன் ஒழித்தாய் அன்று வழுதிக்கு மதன்
செங்கரும்பின் கூந் ஒழியச்செய்யாயோ - அங்கம்உறு 156

வெப்புநோய் தீர்க்காய் அவ்வேந்தனுக்கு என்வெவ்விரக
வெப்பு நோய் தீர்க்க விரும்பாயோ - தப்பு அலவே 157

சாக்கியர் இட்ட நஞ்சுதன்னை அமுதாக்கினை இன்று

ஆக்கிய நஞ்சை அமுதாக்காயோ - நீக்க அரிய 158

வெந்தீக்குள்ளே கிடந்தும் வேவாய் என்பார் காமச்
செந்தீச் சுடாது இருக்கச் செய்யாயோ - வந்து கொங்கில் 159

அப்பனியால் வாடாதே யார்க்கும் துயர்ஒழித்தாய்
இப்பனியால் வாடாது இரங்காயோ - அப்பரை 160

மைக்கடல் கொல்லாதபடி வன்கல் மிதப் பித்தாய்
அக்கடல் கொல்லாமல் உறவாக்காயோ - மிக்கு உயர்ந்த 161

மன்றில் பனைவடிவம் மாற்றினாய் அப்பனைமேல்
அன்றில்புள் வேறொருபுள் ஆக்காயோ - தொன்றுதொட்டுத் 162

தென்பொதியில் சாந்தினொடு தென்றல் உறவாய் வந்தாய்
அன்புற என்னோடும் உறவு ஆக்காயோ? - முன்புஇருந்து 163

பாடும் இசை எல்லாம் உன் பாவையராச் சேர்ந்தாய்என்
னோடு முனியாதிருக்க ஓதாயோ - பாடலால் 164

சின்னமொடு காளம் சிவிகை பந்தர் முத்துஅடைந்தாய்
பொன்னே சுடாது அணியப் பூட்டாயோ - முன்இறந்தாள் 165

அங்கத்தைப் பூம்பாவை ஆக்கினாய் ஆதலின்என்
அங்கத்தைப் பூம்பாவை ஆக்காயோ - மங்கத்தான் 166

மாய்ந்தாலும் மாமுதலைவாய்ப் பிள்ளையைப் படைத்தாய்
மாய்ந்தாலும் பின்படைக்க வல்லையே - ஏய்ந்தஉரை 167

செய்தான் என்று என்சொல் செவி ஓர்ந்து செல்வாய் இங்கு
எய்தாமல் அங்குஇருக்க எண்ணாதே - பொய்தீரத் 168

தேசு இவரும் சொக்கருக்கே சென்றிருந்து ஆங்கு அவரைப்
பேசி வரும் தூது பிறிது உண்டோ - நேசமொடு 169

தைவரினும் காட்டத் தகாதாரைத் தாதையர்க்குக்

கைவிரலால் காட்டி அருள்காளையும் - தெய்வவெள்ளிப்170

பூதர வானவரைப் போற்ற முயன்று ஐயாற்றில்

ஆதரவாய்க் கன்ட அரசரும்- நாதர் 171

அளந்து அருள் செம்பொன்னை மணியாற்றில் இட்டு ஆரூர்க்

குளம் தனிலே தேடிஅருள் கோவும் - வளம் திகழும் 172

காளத்தியில் வந்த காட்சி கயிலாயத்து

நீளத்தான் சொற்றவனும் நீயன்றோ - கேள்அப்பால் 173

அம்மை தமக்கு இல்லாதார் அம்மை தாமா இருந்தார்

அம்மை என்று முன்உரைத்த அம்மையார்த் - தம்எதிரே 174

வெள்ஆனை மேற்கொண்ட வேந்தர் வரவிடுத்த

வெள்ஆனை மேற்கொன்ட வித்தகராய்த் - தள்ளாது 175

விஞ்சு உவரால் வண்ணானை வெண்ணீற்றர் என்றுபணிந்து

அஞ்சலி செய்து ஆட்செய்த அன்பராய்ச் - சஞ்சரியாத் 176

தென்கையிலாய வரைச் செல்வர்பால் சென்றாயே

உன்கையில் ஆகாதது ஒன்று உண்டோ - என்கையால் 177

ஆயும் அவள் பாகத்து அன்பரும் உக்கிரராம்

சேயும் புரந்திருக்கும் தென்மதுரை - வாய் இனிய 178

செவ்வழியே செல்வாய் நீ செல்வழி நல்வழிதான்

எவ்வழி என்றால் இயம்பக் கேள் - எவ்வழியும் 179

வெல்வாய் உனைநினைந்து வேயுறு தோளி என்று

செல்வார் தம் காரியம் சித்திக்குமே - செல்வாய் 180

தடைஉண்டோ ஐயாறு தன்னிலே பொன்னி

இடைவிலங்கச் சென்றது அறியேனோ - இடையிலே 181

பாலைநிலம் நெய்தலாப் பண்ணினாய் இன்னும்அதைச்

சோலைநிலம் ஆக்குவை நான் சொல்லுவதுஎன் - மேலானார் 182

கூறும் பொதிசோறு கொண்டுவரின் உனக்கு

வேறும் பொதிசோறு வேண்டுமோ - வீறாகக் 183

கற்பார் பொருள்காணார் காசுபணம் காணில் உனை

விற்பார் அவர்பால் நீ மேவாதே - கற்றாரை 184

எள்ளிடுவார் சொல்பொருள் கேட்டு இன்புறார் நாய் போலச்

சள்ளிடுவார் தம் அருகே சாராதே - தெள்ளுதமிழ்ப் 185

பாயிரம்முன் சொன்னபடி படியாமல் குழறி

ஆயிரமும் சொல்வார்பால் அண்டாதே - ஆய்தருநூல் 186

ஓதிஅறியாத ஒண் பேதையருடனே

நீதி முறையா நிகழ்த்தும் நூல் - பேதமையாம் 187

காணாதான் காட்டுவான் தான்காணான் கண்எதிரே

நாணாது இராதே நவிலாதே - வீணாக 188

ஆற்றின் அளவறிந்து கல்லாது அவைஅஞ்சும்

கூற்றினர் பால் ஏகாதே கூடாதே - போற்றாரை 189

வேண்டாதே கேடில் விழுச்செல்வங் கல்விஎன்று

பூண்டாய் நீதானே பொருள் அன்றோ - ஆண்ட 190

வலவா நல ஆவடுதுறையில் உன்போல்

உலவாக்கிழி பெற்றார் உண்டோ - நல இருப்புஅது 191

ஆக்க அரும் செங்கலைப் பொன் ஆக்கினாய் மண் முழுதும்

மாக்கனகம் ஆக்கிவிட வல்லையே - நோக்கு புகார் 192

பாடியதுஓர் வஞ்சி நெடும்பாட்டால் பதினாறு

கோடிபொன் கொண்டது நின்கொற்றமே - தேடி அருள் 193

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே

கல்லார் கண் பட்ட திருக் கண்டாயே - கல்லார்பால் 194

ஏகாதே அன்பிலார் இந்திரன்போல் வாழ்ந்தாலும்

போகாதே அங்கே புசியாதே - மாகவிஞர் 195

தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு

காமுறுவர் கற்றறிந்தார் என்னும் - மாமகிமை 196

சேர்ந்தது உன்பால் அன்றோ திருப்பாற்கடல் அமுதம்

ஆர்ந்தவர்க்கு அல்லாது பசி ஆறுமோ - சேர்ந்து உன்னை 197

நம்பாதார் வீதி நணுகாதே நல்லார்கள்

தம்பால் இருந்து தரித்து ஏகி - வம்பாகப் 198

பின்போய் யமன்ஓடப் பேர்ந்துஓடும் வையையிலே

முன்போய் எதிர்போய் முழுகியே - அன்போட 199

தாழ்ந்து நீள் சத்தம் தனைக் கற்றார் உள்ளம்போல்

ஆழ்ந்த அகழி அகன்று போய்ச் - சூழ்ந்து உலகில் 200

மேன்மேல் உயர்ந்துஓங்கு வேதம்போல் மேலாக

வான்மேல் உயர்ந்த மதில் கடந்து - போனால் 201

மிருதி புராணம் கலைபோல் வேறுவேறாக

வரு திருவீதி சூழ்வந்தே - இருவினையை 202

மோதும் சிவஆகமம்போல் முத்திக்கு வித்தாக

ஓதுந் திருக்கோயிலுள் புகுந்து - நீ தென்பால் 203

முன்னே வணங்கி முறையின் அபிடேகமுனி

தன் நேயம் போலாம் தளவிசையும் - தன் அடைந்து 204

தேறும் படிவர் சிவலோகம் சேர்ந்து இருக்க

ஏறும் படி நிறுத்தும் ஏணிபோல் - வீறு உயர்ந்த 205

கோமேவு கோபுரமும் கூடலின்மேல் முன் ஒருநால்

மாமேகம் சேர்ந்தது போல் மண்டபமும் - பூமேவும் 206

மட்டு அளையும் வண்டுஎனப்போய் மாளிகைப்பத்தி அறைக்

கட்டளையும் கண்டு களி கூர்ந்தே - இட்ட மணிச் 207

சிங்கா தனத்தில் சிறந்ததிரு வோலக்கம்

எங்காகிலும் ஒருவர்க்கு எய்துமோ - பைங்கழல் சூழ் 208

தேம்கமலத் தேசு தெரிசனம் செய்து அவர்க்கே

பூங்கமலக் கண் கொடுத்த புத்தேளும் -ஓங்கு அமல 209

மையில் அடியில் வணங்காத் தலை ஒன்றைக்

கையில் அளித்த கடவுளும் - மொய் இழந்த 210

மானம் தனக்கு வகுத்த கடம்பாடவிக்கு

மானம் தனை வகுத்த வானவனும்- தேன் அங்கு 211

அணி மலர்த்தாள் நெஞ்சூடு அழுத்தி அழுத்தாதே

மணிமுடிகள் நீக்கி வணங்கக் - கணநாதர் 212

ஓதுதுனியோடு சினம் உற்ற பகை செற்ற முரண்

போத முனிவர் புடைசூழத் - தீதுஇல் 213

அரிய திசைப்பாலர் அத்தம் முதல் தாங்கி

தெரிசனக் கண் பார்த்து ஏவல் செய்யப் - பரவியே 214

முன்இருவர் எண்மரொடு மொய்த்த பதினொருவர்

பன்னிருவர் நின்று பணிசெய்ய - முன்னே 215

நதிகள் எனக்கண்டு நந்தி பிரம்பு ஓங்க

உதகம் இருபாலின் ஒதுங்கிப் - பதினெண் 216

குலத்தேவர் தம் மகுடகோடி பதினெட்டு

நிலத்தோர் முடியால் நெரிய - நிலத்தே 217

செருக்கும் சிநேகம் உற்ற தேவியுடனே

இருக்கும் சினகரத்துள் எய்திப் - பொருக்கெனப்போய் 218

எந்தாய் என்று ஏத்தும் இடைக்காடன் பின்போன

செந்தாமரை போல் திருத்தாளும் - வந்து மனம் 219

தேறிக் கழுத்து அரியத் தென்பாண்டி நாடனுக்கு

மாறித் திரும்பும் மணிக் குறங்கும் - சீறிப் 220

பணிக்கற்கு மாறாப் படைஉடைவாள் சேர்த்து

மணிக்கச்சு உடுத்த மருங்கும் - துணிக்கு அமையத் 221

தொண்டுபடு வந்தி சொரிந்திடும் பிட்டு அள்ளிஅள்ளி

உண்டு பசிதீர்த்த உதரமும் - அண்டும் ஒரு 222

தாய்முலைப்பால் உண்டு அறியாத் தாம் பன்றிக்குட்டிகளின்

வாய் முலைப்பால் ஊட்டிய பூண்மார்பகமும் - தூயமுடி 223

ஆணிக் கனகத்து அழுத்த வழுதிக்கு

மாணிக்கம் விற்ற மலர்க்கையும் - காணிக்காப் 224

பூம்படலை ஆத்திப் புனைமலரைப் பூணாமல்

வேம்பு அலரைப் பூண்ட வியன்புயமும் - ஓம்புகொடி 225

வாதில் கரிக்குருவி வாழ்தற்கு உபதேசம்

காதில் புகன்ற கனிவாயும் - தீதுஇல் சொல் 226

வாயிலா நீ இருந்து வாழும்படி உனக்குக்
கோயிலாத் தந்த குழைக்காதும் - போய் வணிகப் 227

பெண்நீராள் கண்ணீர் பெருகத் தழுவித் தம்
கண்ணீரால் ஆற்றி அருள் கண்களும் - தெண்ணீரார் 228

பண்சுமந்த பாட்டினுக்கும் பாவைதந்த பிட்டினுக்கும்
மண்சுமந்த சோதி மணிமுடியும் - கண் சுமந்து 229

கண்டு களிகூர்ந்து கசிந்து கசிந்து உள்உருகித்
தொண்டு செய்து தாள்முடிமேல் சூடியே - மண்டும் 230

உடுக்கலம் தம்கோக்குலம் என்று உற்றறிந்தால்என்ன
அடுக்கு இலங்கு தீபம் எதிராகக் - கடுத்திடேல் 231

வெங்கதிர் உண்டு உன்குலத்து வெண்மதிஉண்டு என்னல்போல்
தங்க ஆரத் தீபம் தாம் அசையத் - துங்க விடை 232

ஏங்கும் ஒருமீன் உயர்த்தின் எங்கிருப்பேன் என்பதுபோல்
ஆங்கு இடபதீபம் அழன்றுஆட - நீங்காது 233

அருள் தாம் மிருகத்துஉரு ஆனார்க்கு உவந்தே
புருடா மிருகத் தீபம் போற்ற - மருவார் 234
வருகுலத்தார் பானு வரல் நடுக்குற்று என்ன
அருகு உலவும் தட்ட அசைய - இருசுடர்க்கும் 235

சொக்கர் உனைத்தானே சுடர்என்று காட்டுதல்போல்
அக்கரா லத்தி ஒளியாய் விளங்கத் - தக்கவளோடு 236

எற்கும் பயந்து ஒளித்தார் என்று கங்கை தேடுதல்போல்
பொற்கும்தீபம் எதிர்போய் வளையச் - சொற்குஉருகும் 237

அற்புஊர் அத்தொண்டர்க்கு அருள்முத்தி ஈதுஎனல்போல்

கற்பூரத் தட்டில் வாய்ப்பப் - பொற்புஆக 238

நம்குலத்தும் வந்துஉதித்தார் நாதர்என்று பானுமகிழ்ந்து

அங்கு உறல்போல் கண்ணாடி அங்கண்உற - இங்குஅரசர் 239

எம்குலத்தார் ஆயினார் என்றுபிறை தோற்றுதல்போல்

துங்க முடிமேல் குடை வெண்சோதிவிடப் - பொங்கிஎழும் 240

முந்துகடல் வெண்திரைகள் முன்னே மாமிக்காக

வந்தவன்போல் வெண்சாமரை இரட்ட - விந்தை செயும் 241

ஆடுஅரவச் சித்தர் இவர் ஆதலினால் ஆலவட்டம்

நீடுஅரவம் போல எதிர்நின்று ஆட - நாடு அகலா 242

வால நறும்தென்றல் நம் மன்னர்என்று காண்பதுபோல்

கோல விசிறி குளிர்ந்து அணுகக் - காலைத் 243

திருவனந்தல் முன்னாகச் சேவிக்கும் காலத்து

உருஅனந்த தேவருடனே - மருவி எதிர் 244

போற்றுவாய் நீயும் புரோகிதரை முன்அனுப்பித்

தோற்றரவு செய்து துதித்தன்பின் - ஆற்றல் 245

அரிய சிவஆகமத்தோர் ஆதிசைவர் தம்பால்

உரிய படையா ஒதுங்கி - அருமையுடன் 246

மூவர் கவியே முதலாம் கவிஜந்தும்

மூவராய் நின்றார்தம் முன்ஓதி - ஓவாதே 247

சீபாதம் எண்ணாத தீவினைப்பாவி செய்த

மாபாதகம் தீர்த்த மாமருந்தைத் - தீபமணிப் 248

பைந்நாகம் சூழ் மதுரைப் பாண்டியனே பாரமணிக்

கைந்நாகம் சூழ்கோயில் கண்மணியே - மன்ஆக 249

மைக்கண் கரும்பை மருவிப் பிரியாத
முக்கண் கனியே முழு முதலே - மிக்க புனல் 250

கங்கா நதிக்கு இறையே கன்னித்துறைக்கு அரசே
சிங்காதனத் துரையே செல்வமே - எம்கோவே 251

நாட விளைஆடி வந்த நற்பாவைபோல் அடியார்
கூட விளையாடி வந்த கோமானே - தேடஅரிய 252

சிந்தை மகிழ்ந்து அன்புடையார் தேடியநாள் ஓடிஎதிர்
வந்த விளையாட்டு இனிமேல் வாராதோ - வந்து அருளால் 253

பாவும் புகழ்சேர் பழிக்கு அஞ்சி என்று உலகில்
மேவும் பெயர் இனிமேல் வேண்டாவோ - ஆவலினால் 254

புக்கு வந்தார் தம்மேல் பொடிபோட்டு உளம் மயக்கிள்
சொக்கலிங்கம் என்று எவரும் சொல்லாரோ - இக்கு அணைத்த 255

அங்கை வேள்தானே அரசாளவும் சிறிய
மங்கைதனைக் கோட்டி கொளல் வல்லமையோ - கங்கை எலாம் 256

நல்ல மைக்கண் ஊடுவர நல்குதியேநல்நங்கை எல்லாம்
வல்ல சித்தர் என்று அழைக்கமாட்டாளே - நல்லவர்போல் 257

மைக் குவளைக்கண்ணி வளைகவர்ந்து மங்கையர்தம்
கைக்கு வளை விற்கக் கனக்கு உண்டோ - திக்கு வளை 258

தோள் தாரும் வேம்பாய்த் தொடர்ந்து தொடர்ந்தே ஒருதார்
கட்டாரும் வேம்பு ஆகக் கேட்டோ மே - நாட்டம்உற 259

வேளைஎரித்தாய்க்கு இயல்போ மின்னார் கலைகவர்தல்

காளையிடை இருந்து கற்றதோ - மீளாது 260

சென்று இலகு நாரை அன்று சென்ற சிவலோகத்தே

இன்று எனை அங்கு எய்தவிடல் ஆகாதோ - அன்றி அழல் 261

குன்றே விருத்த குமாரர் இளம்பாலர்

என்றே ஓர் பெண் வீட்டு இருக்கலாம் - சென்று ஒருநாள் 262

பொன்னனையாள் வீடும் புகுந்திருக்கலாம் எனின்என்

பொன் அனையாள் வீடும் பொருந்தாதோ - என்னும் மொழி 263

எல்லாம் திருச்செவியில் ஏறும்படி உரைக்க

வல்லாய் உன்போல் எவர்க்கு வாய்க்குமே - நல்லாள் 264

கருணை விழியாள் அங்கயற்கண்ணி தன்னோடு

அருள் புரிய வாழ்ந்திருக்கும் ஐயர் - திருமதுரை 265

தானே சிவ ராசதானி என்று வீற்றிருந்தால்

தேனே நம் பாக்கியத்தின் செய்தியே - ஆனமையால் 266

அந்தரலோகத்தின் மேலான திருஆலவாய்ச்

சுந்தர மீனவன் நின் சொற்படியே - வந்து 267

துறவாதே சேர்ந்து சுகாநந்தம் நல்க

மறவாதே தூதுசொல்லி வா. 268

**தமிழ் விடுதூது முற்றிற்று**

## மிஃராஜ் மாலை பாடிய ஆலிப் புலவர்

மண்ணுலகில் வாழ்ந்து கொண்டே பூத உடலோடு விண்ணுலகிற்கு அண்ணல் எம் பெருமானார் முஹம்மத் முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் செய்த விண்வெளிப் பயணம் மிஃராஜ்.

இந்த பயணத்தின் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு விண்ணுலகைக் காட்டச் செய்த ஏற்பாடு என்றாலும், அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது அவர்களின் தோழர்களுக்கு இருந்த நம்பிக்கையை உரைத்துப் பார்க்கச் செய்த ஏற்பாடும் ஆகும் அது.

கனவில் செய்யலாம் அதுபோன்ற பயணத்தை. ஆனால் அது நனவில் செய்யப்பட்டது. அது தான் வியப்பான விசித்திரம்

பெருமானார் முஹம்மத் முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது 'பானத் கஆத்' என்னும் புகழ்பாடி அதற்குப் பரிசாக அவர்களின் புனித மேனி மீதிருந்தப் போர்வையால் போர்த்தப் பெறும் பெரும்பேறு பெற்ற அரபிக் கவிஞர் கஃபு இப்னு ஸூஹைரின் வழிவந்தவர் 'மிஃ;ராஜ் மாலை' எனனும் அருங்காப்பியத்தைப் புனைந்த ஆலிப் புலவர் அவர்கள்.

அரபவனியில் இருக்கும்வரை உதிரத்தில் இருந்த கவித்திறன் அரபிக் கவிதைகளாக உருவெடுத்தது. அந்த உதிரத்திலிருந்த கவித்திறன் தமிழகம் வந்து தங்கி விட்டபோது தமிழ் கவியாக வடிவெடுத்தது. கஃபு இப்னு சுஹைரின் உதிரம் தம் உடலில் ஓடப்பெற்ற பாக்கியம் பெற்றவர் ஆலிப்புலவர் அவர்கள்.

அண்ணல் எம் பெருமானார் முஹம்மத் முஸ்தபா ரஸூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கனவில் காணவே பெரும் பேறு பெறவேண்டும். அவர்களை நனவில் காண எத்தகு பேறு பெற்றிருக்க வேண்டும்? அத்தகு பெரும்பேறு பெற்றவர்தான் ஆலிப்புலவர் அவர்கள்.

இன்று நெல்லை மாவட்டத்திலுள்ள " மேலச் சேவல் "என்று வழங்கப் பெறும் மங்கை நகரில் பிறந்தவர் ஆலிப்புலவர். மடாதிபதி ஒருவரின் இல்லத்தில் தங்கி தமிழ்கல்வி கற்ற இவர் மலையாள மொழியையும் அறிந்திருந்தார்.

முஸ்லிம்களுக்கென தமிழில் காவியங்கள் இல்லையென்றுணர்ந்த ஆலிப்புலவர், தாம் ஒன்று இயற்ற விரும்பி, அண்ணல் நபி ல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்களின் வான்பயணமான மிஃராஜை காவியமாக்க முனைந்தார்.

காயல்பட்டினம் சென்று நாஜி செய்யது முஹம்மத் அலாவுத்தீன் அவர்களிடம் அதற்கான உரைபெற்று காப்பியம் படைக்கத் தொடங்கினார்.ஹிஜ்ரி 998 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அந்த நூலுக்கு 'மிகறாசு மாலை' என்று பெயரிட்டார்.

அதனை அரங்கேற்றுவதற்கு முஸ்லிம்கள் யாரும் உதவ முன்வரவில்லை. கோட்டாற்றில் வாழ்ந்த தம் மாணவர் சிவலிங்கம் செட்டியாரிடம் செய்தியைக் கூறியபோது, அவர் மனம் வருந்தி தம் நண்பர் பாவாடைச் செட்டியார் என்பவரிடம் அதுபற்றிக் கூறினார்.

கண் பார்வையற்றவரான பாவாடைச் செட்டியார் அப்பணிக்கான செலவை ஏற்று நடத்த முன்வந்தார். அவ்வாண்டு ரஜப் மாதம் முதற்பிறையன்று காவியம் அரங்கேற்றமாயிற்று.

ஆலிப்புலவர் அதன் 110,111 ஆம் பாடல்களைப் பாடியபோது எதிரேயிருந்த வேப்பமரத்தில் ( இன்றைய வேம்படிப் பள்ளிவாசலில்) அண்ணல் நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் திருத்தோற்றம் வழங்கி 'பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலின் தூணில் துளையிட்டு புராக்கைக் கட்டியது இறைவனுக்கும் ஜிப்ரீலுக்கும் எனக்கும் மட்டும்தானேத் தெரியும். நீர் அதனை எவ்வாறு தெரிந்து பாடினீர் ?' என்று வினவ,

'நானும் அறியேன் அவ்வாறு என் வாயில் வந்துவிட்டது' என்று புலவர் கூற அண்ணல் நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் மகிழ்ந்து ஆலிப்புலவரைத் தழுவினார்கள். போர்வை ஒன்றையும் போர்த்தினார்கள்.

அப்போது அங்கு தோன்றிய ஒளியால் பாவாடை செட்டியாரும் கண்ணொளி பெற்றாராம். பெருமானரைக் கண்ட கண்களால் வேறொன்றையும் காணேன் என்று உறுதிபூண்ட ஆலிப்புலவர் தம் கண்களை மறைத்துக் கட்டிக்கொண்டு வாழ்ந்தனாராம்.

ஆயிரத்து நானூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட விண்ணுலகப் பயணம் மிஃராஜ்ஜை பற்றி நானூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நெய்யப்பட்ட நூல்தான் மிஃராஜ் மாலை என்னும் காவியம். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு வயது அதிகம். ஆயினும் இருக்கும் நூல்களில் இது இரண்டாவதாகும். முதல்நூல் ஆயிரம் மசாலா.

ஒருநாள் பாளையங்கோட்டை சென்றபோது மக்ரிப் தொழுகையில் ஸஜ்தா செய்து கொண்டிருக்கும்போது ஆலிப்புலவர் அவர்கள் உயிர்நீத்தார்கள். அது நடந்த நாள் ஹிஜ்ரி 1000 ஆண்டு ரமளான் பிறை 27 வெள்ளிக்கிழமையாகும். அவரின் அடக்கவிடம் பாயையங்கோட்டையில் 'ஆலியபப்பா தர்கா' என்று அழைக்கப்படுகிறது.

அவருக்குப் பின் தோன்றிய உமர் புலவர் சீறாபுராணத்தில் மிஃராஜ் நிகழ்ச்சி பற்றிப் பாடாததற்குக் காரணம் ஏற்கனவே ஆலிப்புலவர் அதுபற்றி பாடிய காப்பியம் மக்களிடையே சிறப்புப் பெற்று வழங்கி வந்ததேயாகும். மேலும் அதுபற்றி அவர்பாட நினைத்தபோது, உமர் புலவரின் கனவில் ஆலியப்பா அவர்கள் தோன்றி அவ்வெண்ணத்தைக் கைவிடும்படி கூறியதுதான் காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

ஆலிப்புலவர் ரஹ்மத்துல்லாஹி அவர்களின் உதிரம் அவர் வழி வந்தவர்களின் உடலில் ஓடியது. அவர் உதிரம் ஒடிய அவர்கள் பலரின் நாவில் கவி ஊறியது. ஆலிப்புலவர் அவர்களுக்கு ஓர் ஆண் மகனும் இரண்டு பெண்மக்களும் இருந்தனர். அவர்களின் சந்ததியினர் கோட்டாற்றிலும், மேலப்பாளயத்திலும் இன்னும் வேறுபல ஊர்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் பலர் பெரும்புலவர்களாகவும் அறிஞர்களாகவும் விளங்கியுள்ளனர். இன்னும் விளங்கிவருகின்றனர்.

(வரலாற்று தகவல்: பன்னுலாசிரியர் மர்ஹூம் எம்.ஆர்.எம் அப்துற் றஹீம்.) பதிவிலிருந்து ..

## வரலாறு படைத்த மிஃராஜ்

- மவ்லவி யூனுஸ் தப்ரீஸ், சத்தியக்குரல் ஆசிரியர் இலங்கை –

அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி பாரிய மாற்றத்தை கொண்டுவருகிறான்.

உலகிற்கு வந்த எல்லா தூதர்களின் வாழ்க்கையிலும் முஃஜிஸாத்துகள் (அற்புதங்கள்) என்ற பெயரில் பலவிதமான அற்புதங்களை நிகழ்த்திக் காட்டி மக்களுக்கு மத்தியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினான்.

அந்த வரிசையில் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் ஹிஜ்ரத்திற்குப்
பின் மிஃராஜ் எனும் விண்வெளி பயணத்தை ஏற்ப்படுத்தினான்.
இந்த பயணம் நபியவர்களுக்கு பாரிய திருப்பு முனையாக அமைந்தது.
மக்களுக்கு மத்தியில் வரலாறு படைத்தது.

## மிஃராஜும் அதன் நோக்கமும்

மிஃராஜின் நோக்கத்தை அல்லாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான். 'தனது அடியாரை மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து, மஸ்ஜிதுல் அக்ஸா வரை பயணம் செய்வித்த அல்லாஹ் தூய்மையானவன். அது எத்தகைய இடம் என்றால், அதனை சூழாக பரகத்தை ஏற்படுத்தியுள்ளோம். மேலும் நமது அத்தாட்சிகளை காட்டுவதற்காக (அவரை அழைத்துச் சென்றோம்) அல்லாஹ் செவியேற்கக் கூடியவனாகவும், பார்க்க கூடியவனாகவும் இருக்கிறான். (17- 01)

இந்த வசனத்தின் மூலம் தனது அத்தாட்சிகளை நபியவர்களுக்கு காட்டுவதற்காக அழைத்து செல்லப் பட்டதாக அல்லாஹ் கூறுகிறான். மேலும் அல்லாஹ்வின் வல்லமையையும் உலகிற்கு காட்டுவதற்காகவும் இந்த விண்வெளிப் பயணத்தை நிகழ்த்தி காட்டியுள்ளான்.

ஓவ்வொரு நபிமார்களுக்கும் ஒவ்வொரு விதமான அற்புதங்களை அல்லாஹ் வழங்கினான். நபியவர்களுக்கு வழங்கிய இந்த அற்புதம் வித்தியாசமான முறையில், உலகமே வியக்க கூடிய அளவிற்கு அல்லாஹ் நிகழ்த்திக் காட்டினான்.

நபி (ஸல்) அவர்கள் கஃபாவுக்கு அருகாமையில் பாதி வழிப்பிலும் பாதி தூக்கத்திலும் இருந்த சந்தர்ப்பத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஏனைய இரண்டு மலக்குமார்களுடன் வந்து நபி (ஸல்) அவர்களை ஸம்ஸம் நீரூற்றுக்கு அருகாமையில் அழைத்து சென்று அவரது நெஞ்சை பிழந்து இதயத்தை வெளியில் எடுத்து ஸம்ஸம் நீரால் கழுவி ஈமான் என்ற நம்பிக்கையாலும், அறிவு என்ற நுண்ணறிவாலும் நிரப்பி, மீண்டும் நெஞ்சில் வைத்து தடவினார்கள். நபி (ஸல்) அவர்கள் சிறு வயதாக இருக்கும் பொழுதும் இப்படி ஒரு சம்பவம் நடந்தது.

நபி (ஸல்) அவர்கள் பைத்துல் ஹராமில் (கஃபாவில்) இருந்து பைத்துல் அக்ஸாவுக்கு ஜிப்ரீல் (அலை) மூலம் அழைத்து செல்லப்பட்டார்கள்.

## புராக்

புராக் என்ற வாகனம் கோவேறு கழுதையை விட சிறியதும், கழுதையைவிட பெரியதும், அது வெள்ளை நிறமானது. அந்த புராக் வாகனம் தன் பார்வை எட்டும் அளவிற்கு அடி எடுத்து வைத்து வேகமாக செல்லக் கூடியது.

## பைத்துல் முகத்திஸ்

நபி (ஸல்) அவர்கள் கஃபாவில் இருந்து பைத்துல் முகத்திஸூக்கு செல்லும் வழியில் செம்மண் குன்றுக்கு அருகில் மூஸா (அலை) அவர்களின் மண்ணரையில் மூஸா நபியை தொழுத வண்ணமாக கண்டார்கள். இது நபியவர்களுக்கு காட்டிய அல்லாஹ்வின் அத்தாட்சியாகும்.

நபி (ஸல்) அவர்கள் பைத்துல் முகத்தஸிற்கு சென்ற உடன் நபிமார்கள் தனது வாகனங்களை கட்டிவைக்கும் இடத்தில் புராக் வாகனம் கட்டிவைக்கப்பட்டது. அங்கு மீண்டும் மூஸா நபியை அல்லாஹ் எடுத்துக் காட்டினான் மூஸா நபி ஷனூஆ குலத்தை சார்ந்த உயரமான மனிதரின் தோற்றத்தில் காணப்பட்டார்கள். அதே போன்று ஈஸா (அலை) அவர்களையம் அல்லாஹ் எடுத்துக் காட்டினான். ஈஸா (அலை) அவர்கள் உர்வா பின் மஸ்ஊத் அஸ்ஸகபி அவர்களைப் போன்ற தோற்றத்தில் காணப்பட்டார்கள். அதே போன்று இப்றாஹீம் (அலை) அவர்களை அல்லாஹ் எடுத்துக் காட்டினான் அவர்கள் நபி அவர்களுடைய சாயலில் காணப்பட்டார்கள். அந்த இடத்தில் எல்லா நபிமார்களுக்கும் தலைமை தாங்கி நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடாத்தினார்கள். தொழுகை முடிந்வுடன் இவர்தான் நரகத்தின் காவலாளி என்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் மாலிக் (அலை) அவர்களை அறிமுகப்படுத்தி ஸலாம் சொல்லும்படி சொன்னார்கள். நபி (ஸல்) அவர்கள் ஸலாம் சொல்ல ஆரம்பிக்கும் போது மாலிக் (அலை) அவர்கள் முந்திக்கொண்டு நபி அவர்களுக்கு ஸலாம் கூறினார்.

அதன் பின் ஜிப்ரீல் (அலை) அவர்களுடன் புராக் வாகனத்தில் ஏறி விண்னை நோக்கி பயணமானர்கள். முதலாவது வானத்தை அடைந்வுடன் அதன் கதவை தட்டினார்கள். முதலாவது வானத்தில் உள்ள வானவர்கள். யார் வந்திருப்பது என்று கேட்டார்கள். ஜிப்ரீல் வந்துள்ளேன் உங்களுடன் வேறு யாரும் வந்துள்ளாரா? ஆம்! முஹம்மத் நபி வந்துள்ளார். அவர் இங்கே அழைத்து வருவதற்கு அனுமதி உள்ளதா? ஆம்! அல்லாஹ்வுடைய அனுமதியினால் அழைத்து வந்துள்ளேன். இப்போது முதலாம் வானத்தில் கதவு திறக்கப்படுகிறது. நபி (ஸல்) அவர்களும் ஜிப்ரீல் (அலை) அவர்களும் உள்ளே செல்கிறார்கள். முதலாவது வானத்தில் ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் எடுத்துக்

காட்டினான் ஆதம் நபிக்கு நபி (ஸல்) அவர்கள் ஸலாம் சொல்கிறார்கள். இப்பொழுது ஆதம் நபி வலது பக்கமாக திரும்பி சிரிக்கிறார்கள். இடது பக்கமாக திரும்பி அழுகிறார்கள். அதற்கான காரணத்தை நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் கேட்டபோது வலது பக்கமாக உள்ளவர்கள் உங்கள் சமுதாயத்தில் சொர்கம் செல்லக் கூடியவர்கள். இடது பக்கமாக உள்ளவர்கள் உங்கள் சமுதாயத்தில் நரகம் செல்லக் கூடியவர்கள். என்று கூறினார்கள்.

இதன் பின் இரண்டாவது வானத்திற்கு செல்கிறார்கள். இரண்டாம் வானத்தின் கதவை தட்டுகிறார்கள் முதலாவது வானத்தில் நடந்தைப் போன்றே சம்பாசனை நடக்கிறது. இரண்டாவது வானத்திற்குள் சென்றவுடன் அங்கு ஈஸா (அலை) அவர்களையும் யஹ்யா (அலை) அவர்களையும் நபி (ஸல்) அவர்கள் சந்திக்கிறார்கள். மூன்றாம் வானத்தில் யூசுப் நபியை சந்திக்கிறார்கள். நான்காம் வானத்தில் இத்ரீஸ் நபியை சந்திக்கிறார்கள். ஐந்தாம் வானத்தில் ஹாரூன் நபியை சந்திக்கிறார்கள். ஆறாம் வானத்தில் மூஸா நபியை சந்திக்கிறர்கள் ஏழாம் வானத்தில் இப்றாஹீம் நபியை சந்திக்கிறார்கள்.

இப்றாஹீம் (அலை) அவர்கள் பைதுல் மஃமூர் பள்ளிவாசலில் தனது முதுகை சாய்த்தவர்களாக அமர்ந்திருந்தார்கள்.

### பைத்துல் மஃமூர்

பைத்துல் மஃமூர் என்பது மலக்குமார்களால் அல்லாஹ்வை வணங்குவதற்காக அமைக்கப்பட்ட பள்ளியாகும். அந்த பைத்துல் மஃமூர்க்குள் ஒரு நாளைக்கு எழுபது ஆயிரம் மலக்குமார்கள் உள்ளே செல்வார்கள். உள்ளே சென்ற மலக்குமார்கள் மீண்டும் வெளியேவர மாட்டார்கள். மறுநாள் புதிதாக எழுபது ஆயிரம் மலக்குமார்கள் உள்ளே செல்வார்கள் இப்படி ஒவ்வொரு நாளும் நடந்துகொண்டே இருக்கும்.

### ஸித்ரதுல் முன்தஹா

ஸித்ரதுல் முன்தஹா என்பது இலந்தை இலை மரமாகும். இதனுடைய வேர் பகுதி ஆறாம் வானத்தில் இருந்து ஆரம்பமாகி ஏழாம் வானத்தில் விருட்சமாக அல்லாஹ் படைத்துள்ளான். அதன் இலைகள் யானையுடைய காதுகள் அளவுக்கு இருக்கும். அதனுடைய பழங்கள் பெரிய பெரிய கூஜாக்களைப் போன்று இருக்கும். அந்த இலந்தை

மரத்தை சூழாக பிரகாசமாக வெளிச்சமாக இருக்கும். தங்கத்திலாலான வெட்டுக் கிளிகள் அதனை சூழாக பறந்து கொண்டே இருக்கும்.

### நான்கு நதிகள்

ஸித்ரதுல் முன்தஹா மரத்தின் வேர் பகுதியில் இருந்து நான்கு நதிகள் ஓடிக்கொண்டு இருக்கிறது. அதில் இரண்டு நதிகள் (ஸல்ஸபீல், கவ்ஸர்) சொர்கத்திற்குள்ளும் மற்ற இரண்டு நதிகள் (நைல், யூப்ரடீஸ்) சொர்கத்திற்கு வெளியேயும் உள்ளது.

இந்த இடத்தில் வைத்து நபி (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் பாலுள்ள கிண்ணத்தையும், மது உள்ள கிண்ணத்தையும் கொடுக்கும் போது நபி (ஸல்) அவர்கள் பாலுள்ள கிண்ணத்தை தெரிவு செய்தார்கள். அப்போது நீங்கள் இயற்க்கை மார்க்கத்தை தெரிவு செய்துவிட்டீர்கள். என்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள். மேலும் அந்த இடத்தில் வைத்து மூன்று கட்டளைகள். நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டன.

1. தொழுகை
2. ஸூரதுல் பகரா அத்தியாயத்தின் கடைசி மூன்று வசனங்கள்.
3. இணைவைக்காத நிலையில் பெரும்பாவங்கள் செய்திருப்பின் அவர்களுக்கு மன்னிப்பு என்ற மூன்று கட்டளைகள் வழங்கப்பட்டன.

### மூஸா நபியும் தொழுகையும்

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் பேசிவிட்டு திரும்பும் போது மூஸா நபி அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் என்ன சொன்னான் என்று கேட்ட போது ஐம்பது நேரத்து தொழுகையை அல்லாஹ் என் சமுதாயத்தின் மீது கடமையாக்கினான் என்று சொன்ன உடன் அதற்கு மூஸா நபி உமது மக்கள் ஐம்பது நேரத் தொழுகையை தொழ மாட்டார்கள். அல்லாஹ்விடம் சென்று குறைத்து வாருங்கள். என்று சொன்னவுடன் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் சென்று பேசிக் குறைக்கின்றார்கள். இறுதியில் ஐந்து நேரத் தொழுகையை பெற்றுக்கொண்டு வரும்போது மீண்டும் மூஸா நபி ஐந்து நேரத் தொழுகையையும் உமது சமுதாயம் தொழமாட்டார்கள். இதையும் அல்லாஹ்விடம் சென்று குறைத்து வாருங்கள். என்று கூறிய போது நபி (ஸல்) அவர்கள் எனக்கு வெட்கமாக உள்ளது என்று வந்து விடுகின்றார்கள். எவர் ஐந்து நேரத் தொழுகையை சரியாகத்

தொழுகிறாரோ அவர் ஐம்பது நேரத் தொழுகையை தொழுததிற்கு சமனாகும். என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## நபி (ஸல்) அவர்களும், பைத்துல் முகத்திஸூம்

நபி (ஸல்) அவர்கள். மிஃராஜ் சென்று வந்த செய்தியை மக்களிடத்தில் சொல்லிய போது முஷ்ரிகீன்கள் அதை மறுத்தார்கள். அத்துடன் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். குறிப்பிட்ட இந்த இரவில் யாரும் போய்வர முடியாத இந்த பயணத்தை இவர் சென்றுவந்தாராம். என்று பரிகாசம் செய்ய ஆரம்பித்தனர். இப்பொழுது பைத்துல் முகத்திஸூக்கு சென்றுவந்தவர்கள். நபி அவர்களிடம் சில கேள்விகளை கேட்க ஆரம்பித்தார்கள். ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்க்கையில் ஒரு தடவை கூட பைத்துல் முகத்திஸூக்கு சென்று வந்தது கிடையாது. இவர்கள் நபியவர்களிடம் பைத்துல் முகத்திஸ் பள்ளியில் உள்ள சில வர்ணனை பற்றி கேட்டார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் அதைப் பற்றிய சரியாக தெரியாததினால் தடுமாற்றத்திற்குள் ஆளான போது இப்பொழுது அல்லாஹ் அந்த பைத்துல் முகத்திஸ் பள்ளியை நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் அப்படியே கொண்டுவந்து காட்டினான். அதைப் பார்த்துக்கொண்டே நபி (ஸல்) அவர்கள் முஷ்ரிகீன்களுடைய கேள்விகளுக்கு பதில் அளித்தார்கள் (முஸ்லிம்: 278)

## நபியவர்கள் அல்லாஹ்வைக் கண்டார்களா?

மஸ்ரூக் பின் அஜ்தஉ (ரழி) அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களுடன் பேசிக்கொண்டு இருக்கும் போது ஆயிஷா (ரழி) அவர்கள் மூன்றில் ஒன்றை யார் கூறினாலும் அவர் அல்லாஹ்வின் மீது இட்டுக் கட்டிவிட்டார். என்று கூறிவிட்டு முதலாவது யார் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை நேரடியாக பார்த்ததாக கூறுகிறாரோ அவர் அல்லாஹ் மீது இட்டுக் கட்டிவிட்டார். என்று கூறியதும் சாய்ந்திருந்த மஸ்ரூக் அவர்கள் உம்முல் முஃமினீன் அவர்களே! நிதானித்துக் கூறுங்கள். அவனை அவர் தெளிவான அடிவானத்தில் கண்டதாக அல்லாஹ் கூறுகின்றனே என்று கேட்டபோது அதற்கு ஆயிஷா (ரழி) அவர்கள் இதைப் பற்றி முதன் முதலாக அல்லாஹ்வின் தூதரிடம் நான் தான் கேட்டேன் அதற்கு நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை நேரடியாகக் கண்ட செய்தியைத் தான் அந்த வசனத்தின் மூலமாக அல்லாஹ் கூறுகிறான். என்று கூறினார்கள். (நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை இரண்டு தடவை அவர்களின் நிஜ உருவத்தில் நேரடியாக கண்டார்கள். ஒரு தடவை ஹிராக் குகையில் இருந்து வெளிவரும் பொழுது ஜிப்ரீல் (அலை) அவர்கள் வானத்திற்கும் பூமிக்கும் இடைப்பட்ட பெரிய ஒரு சிம்மாசனத்தில் அமர்ந்தவராக

இறக்கையை விரித்த வண்ணமாக காணப்பட்டார்கள். இரண்டாவது தடவை சித்ரதுல் முன்தஹாவில் வைத்து ஜிப்ரீல் (அலை) அவர்களின் நிஜ உருவத்தில் நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள்.) இதைத்தான் அல்லாஹ் குர்ஆனில் ‘அவர் தெளிவான அடிவானத்தில் அவரைக் கண்டார்’ (அல்குர்ஆன் 81:23) ‘மற்றொரு முறையும் அவரை அவர் கண்டார்’ (அல்குர்ஆன் 53:13) இந்த இரண்டு வசனங்களும் நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை நேரடியாக கண்டதாக தெளிவு படுத்தப்படுகிறது.

இரண்டாவது அல்லாஹ்வின் தூதர் இறைவேத்தில் எதையாவது மறைத்து விட்டார்கள் என்று எவராவது கூறினால் அவர் அல்லாஹ்வின் மீது இட்டுக் கட்டியவராவார்.

மூன்றாவது நபி (ஸல்) அவர்களுக்கு மறைவான அறிவு இருக்கிறது என்று யாராவது கூறினால் அவரும் அல்லாஹ்வின் மீது இட்டுக் கட்டியவராவார். என்று ஆயிஷா (ரழி) அவர்கள் கூறினார்கள்.

மிஃராஜின் போது நபி (ஸல்) அவர்களுக்கு நரகத்தில் ஒவ்வொரு காட்சிகளையும் அல்லாஹ் எடுத்துக் காட்டினான். அதே போன்று சுவர்க்கத்தில் ஒவ்வொரு இன்பங்களையும் அல்லாஹ் எடுத்துக் காட்டினான்.

எனவே இந்த மிஃராஜின் மூலம் அல்லாஹ் அவனது ஆற்றலை வெளிக்காட்டுவதோடு நபி (ஸல்) அவர்களுக்கு தனது அத்தாட்சிகளை காட்டி உலக மக்களுக்கு இந்த செய்தி வரலாறு படைத்ததாக அமைத்துள்ளான்.